Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36 | கதிர் : 174 | புதன்கிழமை | வைகாசி 05 ஆம் நாள் 19 மே 2021 | வள்ளுவர் ஆண்டு 2051 | பக்கங்கள்: 16 | விலை : ரூ.30 | செய்தி : 021 493 0000 | விளம்பரம்: 021 493 1111



## ஈழத்தமிழர்கள் மீதான இனப் படுகொலைக்கு ஒட்டுமொத்த சிங்கள அரசே பொறுப்பானது

### முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுக்கட்டமைப்பு அறிக்கை

சர்வதேச சமூகமும், சர்வதேச மனித உரிமை அமைப்புக்களும் இனப் படுகொலையாளிகளாக தனிநபர்களை அடையாளம்காண முயற்சித்து, அவர்களே மனித உரிமை மீறல்களுக்கு பொறுப்பானவர்களாக கட்டமைக்க முயற்சிப்பது சிங்கள-பௌத்த ஒட்டுமொத்த அரசை, அதன் குற்றவாளித் தன்மையிலிருந்து விடுவிப்பதாகும். ஈழத்தமிழர்களின் இனப்படுகொலைக்கு சிங்கள-பௌத்த அரசு கூட்டாக பொறுப்புக்கூற வேண்டும் இவ்வாறு வலியுறுத்தியுள்ளது முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுக்கட்டமைப்பு.

(விரிவான அறிக்கை - பக்கம் 04)

## இனப் படுகொலையே இடம்பெறவில்லையாம்

### தமிழ் மக்களுக்கும் போர் வெற்றி சொந்தம் நாடாளுமன்றில் பிரதமர் மஹிந்த தெரிவிப்பு

கொழும்பு, மே 19

'இனப் படுகொலை செய்யும் நோக்கில் போர் முன்னெடுக்கப்படவில்லை என்பதுடன் இனப் படுகொலையை மையப்படுத்தி எமது படைகளை படைத்தளபதிகள் வழிநடத்த 15 >

## முன்னாள் எம்.பி. துரைரெட்ணசிங்கம் கொரோனாவால் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், மே 19

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கதிர்காமத்தம்பி துரைரெட்ணசிங் கம் கொரோனாத் தொற்றுக்கு உட்பட்டு சிகிச்சை பெற்று 15 >

## தமிழர் தாயகமெங்கும் நேற்று

# இனப் படுகொலை நினைவேந்தல்!



யாழ்ப்பாணம், மே 19

2009 ஆம் ஆண்டு இறுதிப்போரில் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொன்று குவிக்கப்பட்ட, இனப் படுகொலையின் 12ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் தமிழர் தாயகமெங்கும் நேற்று உணர்ச்சி பூர்வமாகக் கடைப்பிடிக்கப்பட்டன. 15 >

## திங்கள், செவ்வாய் அரச விடுமுறை

கொழும்பு, மே 19

நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தப்படும் பயணத் தடை காரணமாக எதிர்வரும் திங்கட்கிழமை மற்றும் செவ்வாய்க்கிழமை அரச விடுமுறை நாள்களாக அறி 15 >



## முள்ளிவாய்க்கால் தூபி மீண்டும் அமைக்கப்படும்

### மாவை சேனாதிராசா உறுதி

யாழ்ப்பாணம், மே 19

இனப் படுகொலை நடந்தேறிய முள்ளிவாய்க்கால் மண்ணில், அமைக்கப்பட்ட நினைவுச் சின்னம் இரவோடு இரவாகத் தகர்க்கப்பட்டாலும், மீண்டும் 15 >

## உயர்நீதிமன்றத்தின் திருத்தங்களை உள்வாங்க அமைச்சரவை அனுமதி

### துறைமுக நகர் சட்ட வரைவு மீது நாளை வாக்கெடுப்பு

கொழும்பு, மே 19

கொழும்பு துறைமுக நகர் விசேட பொருளாதார ஆணைக்குழு சட்ட வரைபில் திருத்தம் மேற்கொள்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. பொதுஜன பெரமுன தலைமையிலான அரசின் விசேட அமைச்சரவைக் கூட்டம் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையில் நேற்று மாலை நடைபெற்றது. 15 >

## வடக்கில் கொரோனா 137



யாழ்ப்பாணம், மே 19

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 95 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் மேலும் 137 பேருக்கு கொரோனாத் தொற்றுள்ளமை இன்று (நேற்று) செவ்வாய்க்கிழமை உறுதிப்படுத்தப்பட்டது 15 >

## கொரோனாவால் யாழ்ப்பாணத்தில் ஒருவர் இறப்பு!

யாழ்ப்பாணம், மே 19

கொரோனாப் பெருந்தொற்றுக் காரணமாக நேற்று யாழ்ப்பாணத்தில் ஒருவர் உயிரிழந்தார். கொரோனாத் தொற்றுக்கு உட்பட்டு சிகிச்சை பெற்று 15 >

உதயன் சஞ்சீவி

வாசகர்களே....!

ஞாயிற்றுக்கிழமை பத்திரிகை இம்முறை வெள்ளிக்கிழமை வெளிவருகிறது.

32 பக்கங்களில் 40/= மட்டுமே!

தற்போதைய அசாதாரண சூழ்நிலையை முன்னிட்டு எதிர்வரும் 23.05.2021 ஞாயிற்றுக்கிழமைக்குரிய சஞ்சீவி வார இதழுடன் கூடிய உதயன் நாளிதழை 21.05.2021 வெள்ளிக்கிழமையே எமது முகவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வட்டுக்கோட்டை அலுவலகத்தில் இடம்பெற்ற முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வில், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனுடன், அவரின் முன்னாள் இணைப்பாளர் பிரதாப், வலிகாமம் மேற்கு பிரதே சபை உறுப்பினர்கான ஜெயந்தன், துரைலிங்கம், சிறிஜீவா, மற்றும் வலி. தென்மேற்கு பிரதேச சபை உறுப்பினர்களான அனுசன், ஜிப்ரிக்கோ, ஆகியோர் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர். (ப-319)

முள்ளிவாய்க்கால் இனப் படுகொலையின் 12ஆவது நினைவேந்தல் நிகழ்வு, யாழ்ப்பாணம், மார்ட்டின் வீதியில் உள்ள இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி அலுவலகத்தில் நேற்று மாலை 6 மணியவில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான மாவை சேனாதராஜா, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன், குலநாயகம், யாழ். மாநகர சபை முன்னாள் முதல்வர் ஆனோல்ட், வலிவடக்கு பிரதேச சபையின் தவிசாளர் சுகிர்தன் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர். (ப)

# உண்மையை உரைத்ததால் என்மீது குற்றவியல் விசாரணை?

*முள்ளிவாய்க்கால் அறிக்கையில் விக்னேஸ்வரன் எம்.பி. தெரிவிப்பு*

**யாழ்ப்பாணம், மே 19**

**நான் கூறியிருந்த விடயங்கள் தொடர்பில் என்னைப் பொறுத்த வரையில் இன்னும் ஓரிரு நாள்களில் குற்றவியல் குற்றச்சாட்டுகள் சிலவற்றுக்கு நான் பதில் கூற வேண்டியுள்ளது. நான் கூறியவை உண்மையாக இருந்தாலும் அவை குற்றச்சாட்டுக்களாக என்மீது சுமத்தப்பட்டுள்ளன. நான் பேசிவை தேசிய ரீதியாகவும் இன ரீதியாகவும் வன்முறையை எழுப்பும் விதத்தில் அமைந்துள்ளன என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளேன்.**

இவ்வாறு, யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் குறிப்பிட்டுள்ளார்.
முள்ளிவாய்க்கால் நினைவு தின அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:
நான் பேசிய விடயங்களில்,

1. இலங்கையின் பூர்வீகக் குடிகள் பேசிய மொழி தமிழ் மொழியே என்பது
2. மகாவம்சம் ஒரு சரித்திர வலுக்கொண்ட ஆவணம் அல்ல என்பது
3. இலங்கை அரசின் ஒருதலைப்பட்சமான, தமிழ் மக்களுக்கு எதிரான நடவடிக்கைகளே விடுதலைப் புலிகளை ஆயுதம் ஏந்த வைத்தன என்பது
4. போரின் முடிவின்போது முள்ளிவாய்க்காலில் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் கொன்றொழிக்கப்பட்டனர் என்பது
5. வடக்கில் சிவில் நடவடிக்கைகளை இராணுவத்தினரே பாரமேற்றிருக்கின்றனர் என்றும் வடக்கானது இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் இருந்து வருகின்றது என்பது. இவையே நான் கூறிய விடயங்கள். இவை தொடர்பிலேயே நான் குற்றவியல் விசாரணையை எதிர்கொள்ளவுள்ளேன்.

தமிழ் பேசும் மக்களே இலங்கையின் வடக்குக் கிழக்கில் பெரும்பான்மையினர். ஆனால் நாம் இதுகாறும் பேணிவந்த தனித்துவத்துக்கு இப்போது ஆபத்து வந்துள்ளது. பௌத்தர்கள் வாழாத இடங்களில் பௌத்த மதத்தை இராணுவ துணை கொண்டு திணிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. தமிழர்கள் வாழ்ந்த இடங்களில் வெளியில் இருந்து சிங்களக் குடியேற்றவாசிகள் வருவிக்கப்பட்டு அரச குடியேற்றங்களில் நிலை நிறுத்தப்படுகின்றனர். குடிப்பரம்பல் நிலை மாற்றப்பட்டு வருகின்றது. நினைவுத் தூபிகள் அழிக்கப்பட்டு வருகின்றன.
அதுமட்டுமன்றி, நாட்டின் ஒருசாராரை அடித்துத் துன்புறுத்திப் பதவியில் இருக்கும் அரசு அநியாய நடவடிக்கைகளை எடுக்கும்போது சர்வதேச சமூகத்தால் எதுவுமே செய்ய முடியாதிருப்பது மனவருத்தத்தை அளிக்கின்றது. அரச காணிகள் 60 ஆயிரம் ஏக்கர் வரையும் தனியார் காணிகள் 3 ஆயிரம் ஏக்கர் வரையும் படையினர் கையேற்றிருக்கின்றார்கள். நேரடியாகவோ மறைமுகமாகவோ படையினர் பயிரிடுதல், மீன் பிடித்தல், வியாபாரங்களில் ஈடுபடல், வளங்களைச் சூறையாடுதல் என்று பலவற்றில் ஈடுபட்டு வருகின்றனர்.
வெளி மாகாணங்களில் இருந்து வந்து வடக்கு கிழக்கு மாகாணங்களில் காணிகளை அபகரிப்பவர்களுக்கு படையினர் துணைபுரிகின்றார்கள். பிறழ்வான வரலாற்றை நிலைநாட்ட விரும்புவோருக்கு உற்ற துணையாக நிற்கின்றார்கள். மக்களின், முக்கியமாக இளைஞர்களின் வறுமையைப் பாவித்து அவர்களுக்கு மூளைச் சலவைசெய்யப் பார்க்கின்றார்கள்.
ஆகவே, வடகிழக்கில் படையினர் தரித்து நிற்பதற்கான உண்மையான காரணங்கள் தெரியப்படுத்தப்பட வேண்டும். அக் காரணங்கள் சர்வதேச படையினர் சட்ட நிபுணர் குழாமால் ஆராயப்பட வேண்டும்.
வடக்கு கிழக்கில் மட்டும் மிகக்கூடிய படையினரை நிலைநிறுத்த காரணம் என்ன? தொடர்ந்து எம் மக்களைக் கட்டுப்படுத்த, ஆணைக்குட்படுத்த, செய்திகள் சேகரிப்பதாகக் கூறி உளவறிய படையினரை அரசுகள் இங்கு நிலை நிறுத்தியுள்ளமை மனவருத்தத்தைத் தருகின்றது. வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழ் பேசும் பெரும்பான்மையினரின் குறைகள் தீர வேண்டும் என்றால் சர்வதேச கண்காணிப்புடன் மக்கள் வாக்கெடுப்பு ஒன்று வடக்கு கிழக்கில் நடத்தப்பட வேண்டும். இவ்வாறான மக்கள் தீர்ப்பை வடகிழக்கில் சாத்தியமாக்க அமெரிக்கா, பிரிட்டன் மட்டுமன்றி கனடா, இந்தியா, ஆஸ்திரேலியா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஜனநாயகத்தையும் ஜனநாயக நிறுவனங்களையும் மதிக்கும் நாடுகள் அனைத்தும் அதற்காகப் பாடுபட வேண்டும். என்றுள்ளது. (து)



## வவுனியாவில் ரெலோ அஞ்சலி

வவுனியா, மே.19
இறுதிப் போரில் உயிரிழந்த உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு ரெலோ அமைப்பின் வவுனியா அலுவலகத்தில் நேற்று கடைப்பிடிக்கப்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம் தலைமையில் குறித்த அஞ்சலி நிகழ்வு நடைபெற்றது. நிகழ்வில் ரெலோவின் ஆதரவாளர்கள் மற்றும் நலன்விரும்பிகள் கலந்துகொண்டிருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (து-110)

## ரவிகரனின் வீட்டின் முன்பாக இரவுநேரம் குவிந்த ராணுவம்

முல்லைத்தீவு, மே 19
முல்லைத்தீவு கள்ளப்பாடு, வடக்கு பகுதியில் அமைந்துள்ள தனது வீட்டின் முன்பாக, நேற்று இரவு இராணுவத்தினர் பலர் குவிந்திருந்தனர் என்று, வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்தார்.
முள்ளிவாய்க்கால் இனப் படுகொலை நினைவஞ்சலியை நேற்று மாலை 6 மணிக்கு கடைப்பிடித்திருந்தேன். இதன் பின்னர், எனது வீட்டின் முன்பாக ஆயுதம் தாங்கிய இராணுவத்தினர் பலர் ஒன்றுகூடியிருந்தனர் என்று ரவிகரன் மேலும் தெரிவித்தார். (து-246)

### யாழ். பல்கலைக்கழகத்தின்

## பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் ஐவர் விசாரணையின் பின்னர் விடுவிப்பு

யாழ்ப்பாணம், மே 19
நினைவேந்தல் விவகாரத்தால், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் ஐவர், கோப்பாய் பொலிஸாரால் நேற்றுப்பிற்பகல் கைதுசெய்யப்பட்டு, விசாரணையின் பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வளாகத்தினுள் அமைந்துள்ள முள்ளிவாய்க்கால் நினைவிடத்தில் நினைவேந்தல் நிகழ்வு நேற்று நடைபெற்றது.
அந்த நிகழ்வை நடத்துவதற்கு மாணவர்களை பல்கலைக்கழக வளாகத்துக்குள் அனுமதித்தமை மற்றும் அங்கு நடைபெற்ற நிகழ்வு தொடர்பில் வாக்குமூலம் பெறுவதற்காகவே கடமையிலிருந்த பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் ஐவர் கைதுசெய்யப்பட்டு கோப்பாய் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டிருந்தனர். அங்கு விசாரணை நடத்திய பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளனர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (து-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழின அழிப்புக்கு 22 நாடுகள் துணை

## திருமாவளவன் அறிக்கை



**கொழும்பு,மே 19**

**இலங்கையில் தமிழின அழிப்புக்கு 22 நாடுகள் நேர்முகமாகவோ, மறைமுகமாகவோ பங்கேற்றன. போர் மரபுகள் எதனையும் பின்பற்றாமல் நச்சுக் குண்டுகளையும், ஏவுகணைகளையும் வீசி,புலிகள் அல்லாத பொதுமக்களையும் அழித்தொழித்தனர். இது பங்கரவாத ஒழிப்பு என்னும் பெயரில் ஏகாதிபத்திய நாடுகளால் அரங்கேற்றப்பட்ட இன அழிப்புப் போராகும்.**

இவ்வாறு விடுதலைச்சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

2009 ஆம் ஆண்டு ஈழத்தில் சிங்கள இனவெறிப் படையினர் நடத்திய அரசப் பயங்கரவாத ஒடுக்குமுறையில், இலட்சக்கணக்கான அப்பாவி பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர். தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிராக சிங்கள இனவெறியர் நடத்திய இறுதிப்போர், முள்ளிவாய்க்கால் என்னுமிடத்தில் பொதுமக்களின் மரண ஓலங்களுக்கிடையில் குருதிச் சேற்றில் ஓய்ந்தது.

பிரபாகரன் தலைமையிலான புலிப் படையினரைப் பயங்கரவாத அமைப்பினர் என்று முத்திரை குத்தி, பயங்கரவாதத்துக்கு எதிரான போர் என்னும் பெயரில் அவர்களை அழித்தொழிக்கும் திட்டத்தைத் தீட்டி, அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து உள்ளிட்ட ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் இந்தியா போன்ற ஏராளமான நாடுகளின் உதவியோடு முள்ளிவாய்க்கால் பேரவலத்தை அரங்கேற்றினர்.

முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் 12 ஆவது ஆண்டாக நினவுகூரப்படும் இந்த நாளில், ஐ.நா. பேரவை உள்ளிட்ட சர்வதேச சமூகத்தின் நல்லாதரவைத் திரட்டி, ஈழ விடுதலையை வென்றெடுப்போம்- என்றுள்ளது. (4)

# அரச ஊழியர்களுக்கு மே.21இல் கொடுப்பனவு

கொழும்பு,மே 19

அரச ஊழியர்களுக்கான மே மாதக் கொடுப்பனவு எதிர்வரும் 21 ஆம் திகதி வழங்கப்படும்.

நாட்டில் தற்போது நிலவும் கொரோனாத் தொற்று நிலைமை காரணமாக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று நிதி அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.(4)

# தடை உத்தரவை மீறி அஞ்சலி மட்டக்களப்பில் இருவர் கைது

மட்டக்களப்பு, மே 19

மட்டக்களப்பு கிரான் கடற்கரைப் பகுதியில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வை அனுஷ்டித்த விமலசேன லவக்குமார் மற்றும் அவரின் தந்தை ஆகிய இருவரையும் கல்குடா பொலிஸார் கைது செய்துள்ளனர்.

விமலசேன லவக்குமாருக்கு வாழைச்சேனை நீதிமன்றால் நினைவேந்தல் தடையுத்தரவு வழங்கப்பட்ட நிலையில் நேற்று அதை மீறி அஞ்சலி செலுத்தியதற்காகவே அவர் கைதானார். (ப)

# கோத்தாபய தலைமையில் வெற்றிநாள் கொண்டாட்டம்

கொழும்பு,மே 19

இலங்கை அரசின் போர் வெற்றியின் 12 ஆம் ஆண்டு நிகழ்வு, பத்தரமுல்லை தேசிய இராணுவ ஞாபகார்த்த நினைவிடத்தில் இன்று இடம்பெறவுள்ளது.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையில் நிகழ்வு இடம்பெறும் என்று இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

உரிய சுகாதார வழிகாட்டல்களுக்கமைய, குறைந்தளவிலானோரின் பங்களிப்புடன் நிகழ்வு இடம்பெறும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு நேற்று பல இடங்களில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிலையில், அதற்கு பொலிஸாரும், இராணுவத்தினரும் தடையை ஏற்படுத்தியிருந்தனர். எனினும் மக்கள் வீடுகளிலும், பிரத்தியேக இடங்களிலும் நினைவேந்தலைக் கடைப்பிடித்தனர். (4)

# துரைரெட்ணசிங்கத்துக்கு யாழ்ப்பாணத்தில் அஞ்சலி

யாழ்ப்பாணம், மே 19

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கதிர்காமத்தம்பி துரைரெட்ணசிங்கம் உயிரிழந்த நிலையில், அவருக்கு யாழ்ப்பாணத்தில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

யாழ்ப்பாணம் மார்ட்டின் வீதியில் அமைந்துள்ள இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் அஞ்சலி செலுத்தும் நிகழ்வு நடைபெற்றது. இந்த நிகழ்வில், கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராசா, சீ.வீ.கே.சிவஞானம் மற்றும் கட்சி உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (த )

# கத்திக்குத்தில் ஒருவர் பலி!

## சுதந்திரபுரத்தில் சம்பவம்

முல்லைத்தீவு, மே 19

முல்லைத்தீவு சுதந்திரபுரம் கொலனி பகுதியில் இடம்பெற்ற கத்திக்குத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச்சம்பவம்பற்றிமேலும்தெரிய வருவதாவது:

சுதந்திரபுரம் கொலனி பகுதியில் இருவருக்கு இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கத்திக்குத்தில் [illegible] யுள்ளது. இந்நிலையில் சுதந்திரபுரம் கொலனியைச் சேர்ந்த 26 வயதுடைய குணராசா நிதர்சன் என்பவர் உயிரிழந்துள்ளார். இறந்தவரின் சடலம், புதுக்குடியிருப்பு ஆதார மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

கொலையாளி என்று சந்தேகிக்கப்படும் நபர் தலைமறைவாகியுள்ளார். அவரை பொலிஸார் தேடி வருகின்றனர். (ம-19)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# துறைமுகநகர சட்ட வரைவுக்கு பெரும்பான்மை ஆதரவு தேவை

*சர்வஜன வாக்கெடுப்பும் அவசியம் என்கிறார் சபாநாயகர் யாப்பா*

கொழும்பு,மே 19

கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்ட வரைவின் சில சரத்துக்கள் அரசியல் அமைப்புக்கு முரணானவை. எனவே சில சரத்துக்களை நிறைவேற்ற சர்வஜன வாக்கெடுப்பும், நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவும் அவசியம் என்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன சபையில் அறிவித்தார்.

நாடாளுமன்றம் நேற்று செவ்வாய்க்கிழமை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது. சபாநாயகர் அறிவிப்பு வேளையின் போது, கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்ட வரைவு தொடர்பான உயர் நீதிமன்றத்தின் வியாக்கியானத்தை சபாநாயகர் சபைக்கு அறிவித்தார்.

இந்தச் சட்ட வரைவின் சில வாசகங்களின் ஏற்பாடுகள் அரசமைப்புக்கு முரணாகவுள்ளன. அவற்றுக்கு பெரும்பான்மை ஆதரவு மற்றும் வாக்கெடுப்பும் அவசியம். எனினும் உயர் நீதிமன்றத்தின் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வாசகங்கள் திருத்தப்படின் சொல்லப்பட்ட முரண்பாடுகள் நீங்கும்.

அதேவேளை சில வாசகங்கள் அரசியல் அமைப்புக்கு முரணானவையாக இல்லை என்றும் அவர் தெரிவித்தார். (ம-4,44)

# பொதுவாக்கெடுப்பு தேவை கிடையாது

*சாதாரண பெரும்பான்மை போதும் என்கிறார் பீரிஸ்*

கொழும்பு, மே 19

கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்ட வரைபை நிறைவேற்றுவதற்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலம் தேவையில்லை. சாதாரண பெரும்பான்மையுடன் அதனை நிறைவேற்றிக்கொள்ளமுடியும் என்று சட்டத்துறை பேராசிரியரும், அமைச்சருமான ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

இது தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்று கருத்து வெளியிட்ட அவர் மேலும் தெரிவிக்கையில்:

'கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்ட வரைபை நிறைவேற்றிக் கொள்வதற்கு கட்டாயம் மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலம் அவசியம் என உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது என்று தவறான முறையில் கருத்துகள் பரப்பப்பட்டு வருகின்றன.

சட்டமா அதிபர் திணைக்களம் ஊடாக உயர் நீதிமன்றத்துக்கு அரசு பல திருத்தங்களை சமர்ப்பித்திருந்தது. அவற்றை உயர்நீதிமன்றம் ஏற்றுள்ளது. வழக்கு தீர்ப்பை நன்கு வாசித்தால் இது தெரியும். அரசால் முன்வைக்கப்பட்டுள்ள திருத்தங்களை குழுநிலை விவாதத்தின்போது உள்வாங்கினால் எந்தவொரு பிரச்சினையும் இல்லை. சாதாரண பெரும்பான்மையுடன் சட்ட வரைபை நிறைவேற்றிக் கொள்ளலாம் என தெளிவாக நீதிமன்ற தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது. உயர்நீதிமன்றத்தின் அனைத்து திருத்தங்களையும் நாம் ஏற்போம். எனவே, மூன்றிலிரண்டு பெரும்பான்மையோ, சர்வஜன வாக்கெடுப்போ தேவையில்லை - என்றார். (ம-44)

# ஈழத்தமிழர்கள் மீதான இனப்படுகொலைக்கு ஒட்டுமொத்த சிங்கள அரசே பொறுப்பானது

## முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுக்கட்டமைப்பு அறிக்கை

**முல்லைத்தீவு, மே 19**

**சர்வதேச சமூகமும், சர்வதேச மனித உரிமைகள் அமைப்புக்களும் இனப் படுகொலையாளிகளாக தனிநபர்களை அடையாளம் காண முயற்சித்து, அவர்களே மனித உரிமை மீறல்களுக்கு பொறுப்பானவர்களாக கட்டமைக்க முயற்சிப்பது சிங்கள- பௌத்த ஒட்டுமொத்த அரசை, அதன் குற்றவாளித்தன்மையிலிருந்து விடுவிப்பதாகும். ஈழத்தமிழர்களின் இனப்படுகொலைக்கு சிங்கள- பௌத்த அரசு கூட்டாக பொறுப்புக்கூற வேண்டும் இவ்வாறு வலியுறுத்தியுள்ளது முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுக்கட்டமைப்பு.**

அந்த அமைப்பால் நேற்று வெளியிடப்பட்ட முள்ளிவாய்க்கால் பிரகடனத்திலேயே மேற்படி இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதில் மேலும் உள்ளதாவது:

முள்ளிவாய்க்கால் எமதினத்தின் இதயம். ஒவ்வொரு ஆண்டும் சிங்கள - பௌத்த அரசு தனது அரச இயந்திரத்தைப் பயன்படுத்தி நினைவேந்தல் நிகழ்வுகளைத் தடுத்து வருவதோடல்லாமல் நினைவேந்தலை நிறுவனமயப்படுத்தவிடக்கூடாது என்பதில் கவனமாய் இருக்கின்றது. அதனால்தான் நினைவுத்திடலை பெயரிட எடுத்த முயற்சிகளைத் தனது இராணுவக் கரம்கொண்டு நசுக்கியிருக்கின்றது.இதனை விடவும் நாங்கள் இறந்தவர்களை நினைந்து சுடரேற்றும் புனித இடத்தை மாசுபடுத்தி அழித்துமிருக்கின்றது. இவ்வாறான இராணுவ அடாவடித்தனங்கள் எமதினத்தின் அடக்குமுறைக்கெதிரான விடுதலை வேட்கையை மேலும் உறுதிப்படுத்துமே தவிர நலிவடையச் செய்யப்போவதில்லை.

முள்ளிவாய்க்கால் என்பது ஈழத்தமிழர்களை 'ஈழத்தமிழ்த் தன்மையில்' ஒருங்கிணைக்கும் தேசிய விடுதலையின் மையப்புள்ளியாகும். முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்ட எமது சொந்தங்கள் ஒவ்வொருவரும் எம்மினத்தின் மூச்சாக வாழ்ந்தவர்கள். சிங்கள-பௌத்த அடக்குமுறைக்கெதிராக ஈழத் தமிழினம் என்றோ ஒருநாள் சுதந்திரத்துடன் வாழும் என்ற கனவுடன் மூச்சடங்கிப் போனவர்கள். முள்ளிவாய்க்கால் ஒரு தோல்வியின் புள்ளி யல்ல, சிங்கள-பௌத்த அரசு முள்ளிவாய்க்காலை, தமிழர் விடுதலைப் போராட்டத்தின் ஒரு தோல்வியின் முடிவாகவே கட்டமைக்க முயல்கின்றது. முள்ளிவாய்க்கால் சிங்கள - பௌத்த அடக்குமுறைக்கெதிராக தொடர்ந்தும் எழவேண்டிய வரலாற்றுக் கடமையை, பட்டறிவினூடு உணர்த்திய வரலாற்றுத் திருப்புமுனையாகும். அடக்குமுறைக்கெதிரான போராட்டங்கள் தோற்றுப் போனதற்கான சான்றுகள் உலகில் எங்கும் இல்லை. வரலாற்றுப் பக்கங்களில் விடுதலைப் போராட்ட அணுகுமுறைகள் பின்னடைவுகளைச் சந்தித்திருக்கின்றன. விடுதலைப் போராட்டத்தை வெற்றி, தோல்வி என்ற இருமை முறையியலுக்குள் வைத்து ஆராய முற்படுவது வரலாற்று அபத்தம். அதைத்தான் இன்று சிங்கள-பௌத்த அரசு செய்து வருகின்றது.

சிங்கள-பௌத்த அரசு முள்ளிவாய்க்கால் தமிழ் இனப்படுகொலையை ஒருபோதும் ஏற்று அங்கீகரிக்கப் போவதில்லை. துருக்கிய அரசு ஆர்மேனியப் படுகொலையை 106 ஆண்டுகளாகியும் ஏற்றுக்கொள்ளவில்லை, தொடர்ந்தும் ஆர்மேனியர்களின் இனப் படுகொலை கோரிக்கையை மறுத்து, நிராகரித்தும் வந்துள்ளது. தமிழ் இனப் படுகொலையை மறுத்து, நிராகரித்தும் வருகின்ற சிங்கள-பௌத்த அரசு வரலாற்றில் ஒருபோதும் நினைவுகூரலுக்கான அங்கீகார வெளியை ஈழத் தமிழர்களுக்கு கட்டமைத்துத் தரப் போவதில்லை. முள்ளி வாய்க்கால் இனப்படுகொலை வரலாற்றியல் சொல்லாடல் மற்றும் சிங்கள - பௌத்த அரசு ஊக்குவிக்கின்ற வெற்றிச் சொல்லாடல்களுக்கு எதிர்வினையாய் உள்ளது. ஈழத் தமிழர்கள் தடைகளுக்கு மத்தியில்தான் நினைவுகூரலை ஒழுங்கமைக்க வேண்டிய வரலாற்றுக் கட்டாயத்துக்குள் வலிந்து தள்ளப்பட்டுள்ளனர். இந் நினைவுகூருதலை அடக்குமுறைக்கெதிரான ஆயுதமாக மாற்றவேண்டிய சூழலை சிங்கள-பௌத்த அரசு ஈழத் தமிழர்கள் மீது திணித்து வருகின்றது. பின் முள்ளிவாய்க்கால் வரலாற்றுத் தளத்தை வைத்துக்கொண்டு ஒற்றையாட்சியை மையப்படுத்தி, அதனை வலுப்படுத்தி, தமிழ்த் தேசிய நீக்க அரசியலை சிங்கள-பௌத்த அரசு முன்னெடுத்து வருவதை அனைவரும் அறிவர்.

வடக்கு - கிழக்கில் இராணுவமயமாக்கலை நீட்சிப்படுத்தி, பயங்கரவாதம் என்ற போர்வையில் வடக்கு-கிழக்கு மக்கள் மத்தியில் அச்சத்தை உருவாக்கி, அச்ச மனநிலைக்கூடாக மக்களை ஆள, கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முயற்சிக்கின்றது. அதையே மக்கள் கிளர்ச்சிக்கு எதிரான உத்தியாகவும், ஆயுதமாகவும் பயன்படுத்துகின்றது. பின் முள்ளிவாய்க்கால் வரலாற்றில் இரத்தமற்ற ஆக்கிரமிப்புப் போரை சிங்கள -பௌத்த அரசு வடக்கு-கிழக்கில் கட்டவிழ்த்து விட்டுள்ளது. அந்தப் போரின் பரிமாணங்கள் நில அபகரிப்பாகவும், சிங்கள -பௌத்த காலனித்துவ மயமாக்காலாகவும், ஈழத்தமிழ் குடிசனப் பரம்பலை மாற்றியமைத்து பிரதிநிதித்துவத்தை சிக்கலுக்கு உட்படுத்துவதாகவும், சிறி லங்காவின் பெரும்பான்மை ஒற்றைப் பண்பாட்டை அங்கீகரிப்பதாகவும், சிங்கள -பௌத்த ஏகாதிபத்தியத்தை தக்கவைத்துக்கொண்டு மகாவம்சத்தில் வாக்களிக்கப்பட்ட தேசத்தை அடையும் இலக்கை கொண்டதாகவும் அமைந்திருக்கின்றன. தமிழர் பூர்விகத்தை நிறுவக்கூடிய மிகத்தொண்மையான ஆதார எச்சங்கள் முதன்மையாக இருந்தபோதிலும் அவற்றை இருட்டடிப்புச் செய்து சிங்கள-பௌத்த தொல்லியல் எச்சங்களை மட்டுமே கண்டெடுக்கின்ற தொல்லியல் திணைக்களம் சிறிலங்காவின் வரலாற்றியலை சிங்கள -பௌத்தத்துக்கு மட்டுமானதாக கட்டமைக்க முயலுகின்றது. கிழக்கில் அபகரிக்கப்படும் தமிழர் நிலங்களில் சிங்களவர்கள் குடியமர்த்தப்பட்டு குடிசனப் பரம்பலை மாற்றியமைப்பதில் சிங்கள- பௌத்த அரசு கங்கணம் கட்டி நிற்கின்றது. ஒட்டுமொத்தத்தில் வடக்கு-கிழக்கில் சிங்கள பௌத்த அரசு, உளவியல் போரையும், இரத்தமற்ற ஆக்கிரமிப்புப் போரையும் கட்டவிழ்த்து, கட்டமைக்கப்பட்ட இனப் படுகொலையை முன்னெடுத்து வருகின்றது.

முள்ளிவாய்க்கால் இனப் படுகொலைக்கு ஈழத்தமிழர்கள் சர்வதேச விசாரணை மூலமே நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையிலும், பட்டறிவிலும் தொடர்ந்து சர்வதேச விசாரணைக்கான பரிந்துரைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சிங்கள - பௌத்த அரசு இனப் படுகொலைக் குற்றவாளிகளை கதாநாயகர்களாக முன்னிறுத்தி தண்டனை விலக்கீட்டு உரிமைக்கூடாக அவர்களைப் பாதுகாத்து வருகின்றது. சர்வதேச சமூகமும், சர்வதேச மனித உரிமை அமைப்புக்களும் இனப் படுகொலையாளிகளாக தனிநபர்களை அடையாளம்காண முயற்சித்து, அவர்களே மனித உரிமை மீறல்களுக்கு பொறுப்பானவர்களாக கட்டமைக்க முயற்சிப்பது; சிங்கள -பௌத்த ஒட்டுமொத்த அரசை, அதன் குற்றவாளித் தன்மையிலிருந்து விடுவிப்பதாகும். ஈழத்தமிழர்களின் இனப் படுகொலைக்கு சிங்கள -பௌத்த அரசு கூட்டாக பொறுப்புக்கூற வேண்டும். இலங்கையில் இயங்கு நிலையில் உள்ள ஒற்றையாட்சி ஜனநாயகத் தன்மை, பெரும்பான்மையினருக்கு சிறப்புரிமை வழங்கி ஏனையவர்களை 'மற்றமைகளாகக்' கட்டமைத்து இனப் படுகொலைக்கு இட்டுச் செல்லுகின்றது. கடந்த காலத்திலும் நிகழ்காலத்திலும் ஈழத் தமிழர்களுக்கு எதிராகச் செய்யப்பட்ட, செய்யப்படும் இனப் படுகொலை, எதிர்காலத்தில் எந்தச் சிறுபான்மையினத்துக்கும் எதிராகச் செய்யப்படலாம் என்ற அச்சம் எழுவது நியாயமானது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கையை வெறுமனே நிகழ்ச்சித் திட்டத்துக்காக வைத்து தீர்மானங்களை நிறைவேற்றுவதன் மூலம் நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கை அருகிப் போகின்றது. இலங்கையை ஐ.நா. பொதுப் பேரவைக்கு பாரப்படுத்தி சர்வதேச குற்றவியல் நீதிமன்றின் ஊடாக மட்டும் நீதியைப் பெற முடியும் என்ற ஈழத்தமிழர்களின் கோரிக்கைக்கு சர்வதேச சமூகம் மதிப்பளிக்க வேண்டும். சர்வதேச சமூகம் தங்களுடைய புவிசார் அரசியல் நலன்களுக்காக மட்டும் செயற்படுவதைத் தவிர்த்து அடக்குமுறைக்குட்படும் மக்களின் சார்பாக செயற்பட வேண்டும் எனவும் அழைப்பு விடுக்கப்படுகின்றது. சர்வதேச சமூகம் ஆர்மேனியப் படுகொலையை, இனப் படுகொலையாக இனங்கண்டு அங்கீகரிப்பது நம்பிக்கையைத் தருகின்ற போதிலும் 106 வருடங்கள் என்பது மிக நீண்ட காலம். அது மட்டுமல்ல பாதிக்கப்பட்டவர்கள் தங்களுடைய வாழ்நாளில் நீதியைப் பெற்றுக்கொள்ளாது போவது மிகுந்த வேதனையையும் ஏமாற்றத்தையும் அளிக்கின்றது.

நினைவுகூரல் என்பது அடிப்படை மனித உரிமை. அடிப்படை மனித உரிமைச் சாசனத்தின் வரலாற்றுப் பின்புலம் இனப்படுகொலைகளின், மனித உரிமை மீறல்களின் அடிப்படையைக் கொண்டிருக்கின்றது. மனித உரிமைச் சாசனத்தில் நினைவுகூரலை, ஓர் உரிமையென வெளிப்படையாகக் கூறாவிட்டாலும் அந்த உரிமை எல்லாவற்றிலும் வியாபித்திருக்கின்றது என்பதே நிதர்சனம் இத் நினைவுகூரல், உரிமைக் கோரிக்கைகளின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டிருக்கின்றது. பின் முள்ளிவாய்க்கால் தமிழர் தேச கட்டுமானத்தில், முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலை நினைவுத்திறம் மிகக் காத்திரமான பங்களிப்பு செய்கின்றது. இந்த நினைவுத்திறம் ஈழத்தமிழர்களை பின் முள்ளிவாய்க்கால் அரசியல் வரலாற்றுத் தளத்தில் வெறும் அடக்கு முறைக்கு உட்படுவோராக மட்டும் கட்டமைக்காமல், சிறிலங்கா அரசின் இனப் படுகொலை உள்நோக்கத்தை வெளிப்படுத்தி, கூட்டாக நீதிவேண்டிய அணிதிரட்டலுக்கு வினைத்திறனோடு அழைப்பு விடுக்கின்றது. தமிழினப் படுகொலை நினைவுத்திறம் சிங்கள-பௌத்த அரசின் பொய்முகத்தை கிழித்து போடுகின்றது. புள்ளிவிபர உண்மைகளை வெளியுலகிற்கு தெரியப்படுத்துவதன் மூலம் சிங்கள-பௌத்த அரசின் கோர முகத்தை வெளிக் கொணருகின்றது. முள்ளிவாய்க் கால் சிறிலங்காவின் இனப் படுகொலைக்கெதிரான சொல்லாடலை கேள்விக்குட்படுத்தி சிக்கலுக்குட் படுத்துகின்றது. நினைவுத்திறம் பலம் வாய்ந்தது. இதுவும், நீதி வேண்டிய பயணமுமே பின் முள்ளி வாய்க்கால் தளத்தில் தமிழர்கள் கையிலெடுக்கப் போகும் ஆயுதங்கள். சிங்களபௌத்த அரசின் இனப்படுகொலையின் அதியுச்சமாக முள்ளிவாய்க்கால் இனப் படுகொலை விளங்குகின்றது. எமது சொந்தங்களையும் அவர்களது கனவுகளையும் நினைவு கூராவிடில் வரலாறு எம்மை ஒருபோதும் மன்னிக்காது.

ஏகாதிபத்திய போட்டி, அரசியல் புதிய ஒழுங்கில் அமைகின்றபோது, வடக்கு கிழக்கின் பிராந்திய அமைவிடம் முக்கி யத்துவம் பெறு கின்றது. இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு, ஈழத்தமிழ்த் தன்மையில் ஒன்றுபட்டு பயணிப்பது வரலாற்றுக் கட்டாயமாகும்.

பின்வரும் கோரிக்கைகளை முள்ளிவாய்க்கால் பிரகடனம் முன்வைக்கின்றது.

1. நினைவுகூரல் என்பது அடிப்படை உரிமை சார்ந்தது மட்டுமல்ல ஈழத்தமிழர்களின் பண்பாட்டு உரிமையும்கூட. ஆகவே இலங்கை அரசு ஈழத்தமிழர்களின் நினைவுகூரல் உரிமையை ஒருபோதும் தடுக்க முடியாது.
2. தமிழ் இனப் படுகொலைக்கு நீதி வேண்டி, இனப் படுகொலைக் குற்றவாளிகளை மட்டுமல்ல சிங்கள- பௌத்த அரசை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் விசாரணைக்காக பாரப்படுத்த வேண்டும்.
3. ஐ.நா. மனித உரிமைகள் பேரவையிலிருந்து, சிறிலங்காவை ஐ. நா. பொதுச் சபைக்கு பாரப்படுத்தி தமிழ் இனப் படுகொலையை விசாரிக்க சர்வதேச பொறிமுறை ஒன்றை அமைக்கும்படி கோருகின்றோம்.
4. தமிழ் இனப் படுகொலையை அங்கீகரித்து அதன் மீள் நிகழாமையை உறுதிப்படுத்த வேண்டும்.
5. வடக்கு - கிழக்கில் தொடரும் கட்டமைக்கப்பட்ட இனப் படுகொலையை தடுத்து நிறுத்தவேண்டும்.
6. இலங்கையின் பல்தேசியத் தன்மையை உறுதிப்படுத்தி தமிழர்கள், தேசத்துக்கு உரித்துடையவர்கள் என்பதோடு தமிழர்களின் தனித்துவமான இறையாண்மையினதும், சுய நிர்ணய உரிமையின் அடிப்படையிலும் தமிழர்கள் சுயாட்சிக்கு உரித்துடையவர்கள் என்பதைத் தெரிவிக்கின்றோம்.
7. ஈழத்தமிழர்கள் அனைவரும், 'ஈழத் தமிழ்த் தன்மையில்' ஒன்றுபட்டு தமிழின விடுதலைக்காக உழைக்க முன் வருவோம் - என்றுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எம்முன்னுள்ள கடமை!

முள்ளிவாய்க்கால் இனப் படுகொலையின் 12ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்று தமிழர் தாயகத்தின் பல இடங்களில் உணர்வுபூர்வமாகக் கடைப்பிடிக்கப்பட்டுள்ளது. வழமைபோல இம்முறையும் இராணுவக் கெடுபிடிகளுக்கும், பொலிஸாரின் வீதித் தடைகளுக்கும் எவ்வித பஞ்சமும் இல்லாமல் இந்த நினைவேந்தலும் நிகழ்ந்து முடிந்திருக்கின்றது.

நினைவேந்தலில் ஈடுபட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான சிவாஜிலிங்கம் எச்சரிக்கை செய்து விடுவிக்கப்பட்டிருக்கின்றார். முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான ஈஸ்வரபாதம் சரவணபவன் நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயத்தில் இலங்கை வான்படையின் குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்டவர்களுக்கு நினைவேந்தல் செலுத்தச் சென்றபோது பொலிஸாரால் வழிமறித்துத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளார்.

முள்ளிவாய்க்கால் மண்ணில் நினைவேந்தலைச் செய்ய நீதிமன்றம் அனுமதித்தபோதும், கொரோனாவைக் காரணம் காட்டி, அந்தப்பகுதியை தனிமைப்படுத்தலுக்குள் உட்படுத்தி அங்கு உணர்வுபூர்வமான அஞ்சலிப்பை செய்ய விடாமல் அரச இயந்திரம் தடுத்து நிறுத்தியிருக்கின்றது.

இவை அனைத்தும் ஒரு செய்தியை உரக்கக்கூறுகின்றன. அது, முள்ளிவாய்க்கால் படுகொலைகளை தமிழர் தாயகம் நினைவுகூருவதற்கு இருக்கக்கூடிய அரச தரப்புத் தடைகளை விலக்கி, 'சட்டத்துக்கு உட்பட்டதொரு பொறிமுறையை' நாம் கண்டறிய வேண்டும் என்பதே.

முள்ளிவாய்க்கால் என்பது சிவில் யுத்தமொன்றின் முடிவிடம் அல்ல. ஆனால், அதை விடுதலைப் புலிகள் முன்னெடுத்த சிவில் யுத்தத்துக்கு எதிரான வெற்றியின் அமைவிடம் என்பதாக வெளிப்படுத்தவே சிங்கள பேரினவாத அரசு எத்தனிக்கின்றது. அதன் வெளிப்பாடுதான் நினைவேந்தலுக்கு வெளிப்படுத்தப்பட்ட இந்த எதிர்ப்புக்கள் மற்றும் கெடுபிடிகள்.

முள்ளிவாய்க்காலில் மூச்சடங்கிப் போனவர்கள் எவரோ மூன்றாம் தரப்பினர் அல்லர். எமது குருதி உறவுகள் அவர்கள். அவர்களை அஞ்சலிப்பதற்கும் நினைவுகூருவதற்கும் எமக்குத் தார்மீக உரிமை உண்டு. அதை உரிய பொறிமுறைகள் மூலம் முன்னெடுக்க தமிழ்த் தேசியம் பேசும் அரசியல்வாதிகளும், பொது அமைப்புகளும் ஒன்றிணைய வேண்டும். அதைவிடுத்து ஒவ்வொரு முறையும் நினைவேந்தலை முன்னெடுக்க முனைவதும், அதற்கு அரச இயந்திரம் எதிர்ப்பை வெளிப்படுத்துவதும், பின்னர் தமிழர் தரப்புக்கள் நீதிமன்றை நாடுவதும் தொடர்கதையாகிக் கொண்டே செல்கின்றது. இந்தத் தொடர்கதைக்கு நீதியின் பாற்பட்ட, சட்டத்துக்கு உட்பட்ட, எந்தத் தகிடுதத்தம் செய்தாலும் நினைவேந்துவதை தடுக்க முடியாத வகையில், காத்திரமான தீர்வொன்று வைக்கப்பட வேண்டும் என்பதே தமிழர்களின் வேணவாவாக உள்ளது.

உரிமைகள் மறுக்கப்பட்டு அடக்குமுறைகள் மேலெழும்போதுதான் சுதந்திரத்துக்கான மோகம், தாகம் ஓர் இனத்தில் பீறிடும். இலங்கையில் இடம்பெற்ற 30 வருடகால சிவில் யுத்தத்துக்கான பின்புலமும் இதுவே. இவ்வாறிருக்கையில் இந்த நீண்ட - கொடிய போர் தந்துவிட்டு சென்றுள்ள வரலாற்றுக் கற்பிதங்களை மறுத்து - மறுதலித்துச் செயற்படுவது சிங்கள பேரினவாத அரசுக்கு நல்ல சகுனமல்ல. இந்த நாட்டில் இன்னுமொரு குருதிச் சகதியை எதிர்கொள்ள தமிழ் மக்கள் தயாரில்லை. 'பட்டதே போதும்' என்ற நிலையில்தான் அவர்கள் உள்ளனர். இவ்வாறிருக்க தமிழர்களுக்கு ஏற்பட்டுள்ள மனக்காயங்களை ஆற்றுப்படுத்துவதற்குப் பதிலாக நினைவேந்தல் தடுப்பு, ஆக்கிரமிப்பு, சிங்களத் திணிப்பு, பௌத்த மயமாக்கல் என்பவை போன்ற இனவாதச் சீண்டல்களை மேற்கொண்டு, இன்னொரு சிவில் யுத்தத்தை நோக்கிய பயணத்துக்குத் தூபமிடும் வேலையை அரசு உடன் நிறுத்திக்கொள்ள வேண்டும். ஏற்கனவே பட்ட காயங்களே இன்னும் ஆறவில்லை. அது தமிழர் தரப்பாக இருந்தாலும் சரி, பெரும்பான்மை மக்களாக இருந்தாலும் சரி.




# தொற்றாளர்களுக்கு அருகிலேயே சிகிச்சை

## கொவிட் செயற்பாட்டு குழு முடிவு

**கொழும்பு, மே 19**



**கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்களுக்கு, அவர்களின் வசிப்பிடங்களுக்கு அருகிலுள்ள சிகிச்சை நிலையங்களில் சிகிச்சை வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. தொற்றாளரின் குடும்பத்தினர் எதிர்கொள்ளக்கூடிய மன அழுத்தங்களைக் கருத்தில் கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.**

கொரோனாவைக் கட்டுப்படுத்தல் தொடர்பில் முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் ஆராய்வதற்காக, கொவிட் செயற்பாட்டு குழு சுகாதார அமைச்சில் நேற்றுமுன்தினம் கூடியது. அதில் அமைச்சர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்;

சுகாதார அமைச்சு தவிர வெவ்வேறு அரச மற்றும் தனியார் நிறுவனங்களால் ஸ்தாபிக்கப்பட்டுள்ள சிகிச்சை நிலையங்களுக்குத் தேவையான மருத்துவ உபகரணங்களை வழங்குவதற்கும் , மருத்துவர்கள் தாதிகள் உள்ளிட்ட மருத்துவக் குழுவை நியமிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இரண்டாம் கட்டமாக வழங்குவதற்கான கொரோனாத் தடுப்பூசிகளைத் துரிதமாகப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்துக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. கொரோனாத் தொற்றாளர்களை இனங்காண்பதற்காக முன்னெடுக்கப்படும் பி.சி.ஆர். பரிசோதனைக்கு சம அளவிலான அன்டிஜென் பரிசோதனைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது-என்றார்.

கூட்டத்தில் சுகாதார அமைச்சின் செயலாளர் விசேட மருத்துவ நிபுணர் சஞ்சீவ முணசிங்க, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அசேல குணவர்தன, மேலதிக செயலாளர் மற்றும் பிரதி பணிப்பாளர் நாயகம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். (எ-4)

# பற்றியெரிந்தது வீடு: உடைமைகள் நாசம்

## கிளிநொச்சியில் சம்பவம்

கிளிநொச்சி, மே 19



கிளிநொச்சி உதயநகர் பகுதியில் வீடு ஒன்றில் தீப் பற்றியதால் அந்த வீட்டிலிருந்த உடைமைகள் எரிந்து நாசமாகின என்று தெரிவிக்கப்பட்டது.

நேற்றுமுற்பகல் 11 அளவில் தீ விபத்து ஏற்பட்டது. தீயை அணைக்கும் நடவடிக்கையில் அந்தப் பகுதி மக்கள் ஈடுபட்டனர். இது தொடர்பில் கரைச்சி பிரதேச சபைக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து, சபையின் தீயணைப்பு பிரிவினர் குறித்த பகுதிக்கு விரைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். எனினும், வீட்டு பாவனைப் பொருள்கள் தீக்கிரையாகியுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (த-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்வரும் 100 நாள்களில் 10 லட்சம் தொற்றாளர்கள்

## சுகாதாரப் பிரிவு எச்சரிக்கை



**கொழும்பு,மே 19**

**இலங்கையில் அடுத்த 100 நாள்களில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 10 லட்சத்தைக் கடக்கும் என்று பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவர் ஹேமந்த ஹேரத் எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்;
சாதாரணமாக கொரோனாத் தொற்றுக்குள்ளான நபரொருவர் மூலம் நான்கு, ஐந்து நாள்களுக்குள் இருவருக்கு வைரஸ் பரவினால்கூட, ஐந்து நாள்களுக்கு ஒரு தடவை தொற்றாளர்களின் எண்ணிக்கை இரட்டிப்பாகக் கூடும்.
இந்த நிலைமை தொடர்ந்தால் அடுத்த 100 நாள்கள் செல்வதற்குள், வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை பத்து லட்சத்தைத் தாண்டக்கூடும்.
எனவே, வைரஸ் தொற்றுக்கு இலக்கான நபரொருவர், அடுத்தவருக்கு தொற்றுப் பரவாத விதத்தில் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி நடத்து கொள்ள வேண்டும். ஏனையோரும் பிற நபர்களிடமிருந்து தமக்கு தொற்று ஏற்படாத விதத்தில் செயற்பட வேண்டும். அதற்காக சுகாதார நடைமுறைகளை முழுமையாகப் பின்பற்ற வேண்டும்." - என்றார்.

(எ-4,44)

# கர்ப்பிணி, பாலூட்டும் தாய்மாருக்கு தடுப்பூசி



கொழும்பு,மே 19
கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு கொரோனாத் தொற்றுக்கான தடுப்பூசிகளைச் செலுத்துவதற்கு சுகாதார அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.
மகப்பேற்று மருத்துவர்கள் ஆய்வகத்தின் செயலாளர் விசேட மருத்துவர் சாமிந்த மாதொட இதனைத் தெரிவித்துள்ளார்.
தடுப்பூசிகள் தொடர்பாக சுகாதார அமைச்சுக்கு ஆலோசனை வழங்கும் குழுவின் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.
கூட்டத்தில் கலந்துகொண்ட மகப்பேற்று மருத்துவர்கள் கர்ப்பிணிகளுக்கும், பாலூட்டும் தாய்மாருக்கும் தடுப்பூசி செலுத்துவதற்கான ஆலோசனைகளை முன்வைத்தனர். இதற்குக் குழு அனுமதி வழங்கியது. இதற்கான திட்டம் சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

(எ-4)

# தொற்றாளர்களை புறக்கணிக்காதீர்

## மனித உரிமைகள் ஆணைக்குழு கரிசனை

கொழும்பு,மே 19
கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்து வரும் நிலையில், அவர்களுக்கு மறுக்கப்படும் உரிமைகள் தொடர்பில், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அவதானம் செலுத்தியுள்ளது.
மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்குக் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் அடிப்படையில், இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு ஆணைக்குழு கடிதம் அனுப்பியுள்ளது.
அதற்கமைவாக கொரோனாத் தொற்றாளர்கள் மருத்துவமனைக்கு அல்லது இடைநிலை பராமரிப்பு நிலையங்களுக்கு அழைத்துச் செல்லப்படுவதற்கு முன்னர், அவர்களுக்கு வழங்கப் பட வேண்டிய முன்னறிவிப்புக்கள் சிலவற்றை ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது.
அந்தக் கடிதத்தில்-
தொற்று உறுதிப்படுத்தப்படுபவர்கள் எந்த மருத்துவமனைக்கு அல்லது சிகிச்சை நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்படப் போகிறார்கள் என்பதை அறிவித்தல், அவர்கள் கொண்டு செல்ல வேண்டிய பொருள்கள் தொடர்பில் அறிவுறுத்துதல் , அழைத்துச் செல்ல முன்னர் அவர்கள் ஆயத்தமாவதற்கான கால அவகாசத்தை வழங்குதல், தொற்றாளர்களின் உறவினர்கள் தகவல்களைத் தெரிந்து கொள்வதற்காக அவர்களுக்கான பொதுவான தொலைபேசி இலக்கமொன்றை வழங்குதல் , தொற்றுக்கு உள்ளான ஒரு நபர் ஏற்கனவே வேறொரு தொற்றா நோயால் அல்லது ஏதேனுமொரு நாள்பட்ட நோயால் பாதிக்கப்பட்டுள்ளவரெனில் அவரை அழைத்துச் செல்ல முன்னர், அவரது நோய்க்கான மருந்துகளை எடுத்துக் கொண்டாரா என்பது தொடர்பில் அறிந்து கொள்ளல், தொற்றாளர்கள் தமது அன்றாட செயற்பாடுகளைத் தனியாக செய்துகொள்ள முடியாதவர்களாவோ அல்லது குழந்தைகளாகவோ காணப்பட்டால் அவர்களுக்கான மாற்று வேலைத்திட்டமொன்றை மேற்கொள்ளல், ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தொற்றுக்கு உள்ளானால் அவர்கள் அனைவரையும் ஒரே சிகிச்சை நிலையத் துக்கு அழைத்து செல்லல், தொற்றாளர்களின் இருப்பிடங்களுக்கு அருகிலுள்ள சிகிச்சை நிலையங்களில் அல்லது மருத்துவமனைகளில் அவர்களை அனுமதிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்,தொற்று உறுதிப்படுத்தப்படும் குழந்தைகளை தாயிடமிருந்து தனிமைப்படுத்தமாலிருக்க நடவடிக்கை எடுத்தல் உள்ளிட்ட விடங்களில் கவனம் செலுத்தவும் - என்றுள்ளது.

(எ-4)

# ரஷ்ய தடுப்பூசியின் அடுத்த தொகுதி விரைவில்

கொழும்பு,மே 19
கொரோனாத் தொற்றுக்கான ரஷ்யத் தடுப்பூசியின் மற்றுமொரு தொகுதி விரைவில் இலங்கைக்குக் கிடைக்கும் என்று இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.
ரஷ்யாவின் ஸ்பூட்னிக் வி தடுப்பூசியை அவசர தேவைக்காகப் பயன்படுத்த அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்தது. அதற்கமைவாக முதல் தொகுதி கடந்த 3 ஆம் திகதி நாட்டுக்குக் கிடைத்தது. முதல் தொகுதியில் 15 ஆயிரம் தடுப்பூசிகள் கிடைக்கப்பெற்றன.
அடுத்த கட்டமாக ஒரு லட்சத்து 85 ஆயிரம் தடுப்பூசிகள் கிடைக்கப்பெறவுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-4)

# 10 ஆயிரத்தை கடந்தது கைது

கொரோனாத் தொற்றுக்கால சுகாதார நடைமுறைகளை மீறினர் என்ற குற்றச்சாட்டில் இதுவரை 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கடந்த ஒக்ரோபர் மாதம் 30 திகதி முதல் இதுவரையான காலப்பகுதியில் 10 ஆயிரத்து 73 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். நேற்றுமுன்தினம் மட்டும் 223 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பிரதிப் பொலிஸ்மா அதிபரும், பொலிஸ் ஊடகப் பேச்சாளருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

(எ-4)

# மரண அறிவித்தல்

பிறப்பு
24 . 03 . 1956



இறப்பு
18 . 05 . 2021

## ஆசைப்பிள்ளை ஜெகநாதன் (ஜெகம்)

**(ஓய்வுபெற்ற யாழ் பனை அபிவிருத்தி சபை தொழில்நுட்ப உத்தியோகத்தர், யாழ் மாநகரசபை பதிவு செய்யப்பட்ட பட வரைஞர், ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலய தர்மகர்த்தா)**

அரியாலை நொத்தாரிஸ் வீதியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட ஆசைப்பிள்ளை ஜெகநாதன் அவர்கள் 18.05.2021 செவ்வாய்க்கிழமை இயற்கை எய்தினார்.
அன்னார் காலஞ்சென்ற ஆசைப்பிள்ளை - கனகம்மா தம்பதியரின் சிரேஸ்ர புதல்வனும், காலஞ்சென்ற மார்க்கண்டு - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், வினிதாவின் அன்புக் கணவரும், சந்திரகாகுந்தன், கஜேந்திரகுமார் - றொணிக்கா ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஆஸ்லி, ஆஸ்ரன், ஆஸ்மிகா ஆகியோரின் தாத்தாவும், கஜேந்திரகுமாரின் மாமனாரும் ஆ.ஜீவநாதன், ஆ.இரகு நாதன், ஆ.நேமிநாதன் காலஞ்சென்றவர்களான ஆ. சந்திரநாதன், ஜே.அ.மஞ்சுளா ஆகியோரின் அன்புச் சகோதரரும், தேவகுணராசா, காலஞ்சென்ற றதி, சுகிர்தா, ராணி, யோக குணராசா, அற்புத குணராசா, மலர் காலஞ்சென்ற டைனேஸ்வரி, சுவர்ணலதா, காலஞ்சென்ற பாமினி, அருள்நேசன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், சறோஜினி, செல்வராசா, தோமஸ், குணரட்ணம், சுகிர்தம், சாரதா, வசந்தன் ஆகியோரின் சகலனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் பின்னர் அறிவிக்கப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தொடர்பு:**
**021 222 6277 (மனைவி)**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். பல்கலையில் ஏற்றப்பட்ட நினைவுச் சுடர் காலால் உதைப்பு

## யாழ்.பல்கலை காவலாளியின் செயலுக்கு மாணவர் கண்டனம்

யாழ்ப்பாணம், மே 19

யாழ். பல்கலைக் கழக வளாகத்தினுள் உள்ள முள்ளிவாய்க்கால் நினைவுச் சின்னம் முன்பாக மாணவர்களால் ஏற்றப்பட்ட சுடரை பல்கலைக்கழக காவலாளி ஒருவர் காலால் தட்டி அகற்றியுள்ளார்.

இச் செயலை பல்கலைக்கழக மாணவர்கள் வன்மையாகக் கண்டித்துள்ளத்துடன், தமது ஆதங்கத்தையும் வெளிப்படுத்தி உள்ளனர். கண்காணிப்புக்கள், தடைகளைத் தாண்டி உயிரிழந்த எம் உறவுகளுக்கு நாங்கள் உணர்வுபூர்வமாக ஏற்றிய சுடரை, காவலாளி காலால் தட்டி அப்புறப்படுத்திய செயலானது எமது இறந்த உறவுகளை அவமதிக்கும் செயலாகும் என மாணவர்கள் கவலையுடன் தெரிவித்தனர்.

பல்கலைக்கழக வளாகத்தினுள் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலைச் செய்யவிடாது தடுக்கும் நோக்குடன் நேற்றுமுன்தினம் முதல், பல்கலைக் கழக சூழலில் இராணுவம், பொலிஸார் குவிக்கப்பட்டு, புலனாய்வாளர்களின் கண்காணிப்புக்கள் அதிகரிக்கப்பட்டிருந்தன. இந்நிலையில் நேற்று மதியம் மாணவர்கள் தடைகளைத் தாண்டி வளாகத்தினுள் உள்ள நினைவுச் சின்னம் முன்பாக சுடரேற்றி அஞ்சலி செலுத்தினர். இந்த நிலையில் அதனை அவதானித்த பல்கலைக்கழக காவலாளி நினைவிடத்துக்குச் சென்று மாணவர்களால் ஏற்றப்பட்ட சுடரை காலால் தட்டி அவ்விடத்திலிருந்து அகற்றியுள்ளார். (ப-இ)

*யாழ். பல்கலை வளாக பகுதியில்*

## ஊடகவியலாளர்களை கைதுசெய்ய முயற்சி

யாழ்ப்பாணம், மே 19

யாழ்.பல்கலைக்கழகத்தைச் சூழ இராணுவம் மற்றும் பொலிஸ் குவிக்கப்பட்டு கெடுபிடிகள் அதிகரிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் செய்தி சேகரிக்கச் சென்ற இரு ஊடகவியலாளர்களைக் கைதுசெய்ய பொலிஸார் முயற்சித்த சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

பல்கலைக்கழகத்துக்குள் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நடைபெறாமல் தடுக்கும் வகையில் நேற்று முன்தினம் மாலையில் இருந்து இராணுவம், பொலிஸ் மற்றும் புலனாய்வாளர்கள் குவிக்கப்பட்டிருந்தனர். நேற்றுக் காலையும் மேலதிகமாக அங்கு வாகனங்கள் மற்றும் பஸ்களில் கொண்டுவந்து இறக்கப்பட்ட படையினர் அப்பகுதியால் சென்று வருபவர்களை மறித்து சோதனை மற்றும் விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர்.

குறிப்பாக யாழ்.பல்கலைக் கழகத்தைச் சூழ உள்ள இராமநாதன் வீதி, ஆடியபாதம் வீதி, பிறவுண் வீதி, பலாலி வீதி மற்றும் பரமேஸ்வரக் கல்லூரி வீதி உள்ளிட்ட வீதிகள் முழுவதிலும் இராணுவம், பொலிஸ் மற்றும் புலனாய்வாளர்கள் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபட்டிருந்தனர். இதன் போது அங்கு செய்தி சேகரிக்கச் சென்ற இரு ஊடகவியலாளர்களை வழிமறித்த பொலிஸார் அவர்களின் மோட்டார் சைக்கில் திறப்பை பறிமுதல் செய்து இரு ஊடகவியலாளர்களையும் தடுத்து வைத்து விசாரணை செய்துள்ளனர். அப்பகுதியில் ஒளிப்படம் மற்றும் வீடியோ பதிவுகள் மேற்கொண்டதற்காக இருவரையும் கைதுசெய்யப் போகின்றோம் என்று கூறிய பொலிஸார் அவர்களின் கமெராக்களை பார்வையிட்டு, அதில் உள்ள பதிவுகளை அழிக்குமாறு உத்தரவிட்டனர். இல்லாவிட்டால் கைதுசெய்து சிறையில் அடைப்போம் என்றும் அச்சுறுத்தியுள்ளனர். இதன் பின்னர் தமது மேல் அதிகாரிகளுடன் பொலிஸார் தொடர்புகொண்டனர். மேல் அதிகாரியின் அறிவுறுத்தலுக்கு அமைய கைதுசெய்வதை தவிர்த்த பொலிஸார் இரு ஊடகவியலாளர்களையும் கடும் தொணியில் எச்சரித்து விடுவித்தனர். (ப-26)

## போர் வெற்றி நாளை முன்னிட்டு இராணுவத்தினருக்கு பதவியுயர்வு

கொழும்பு, மே 19

நாட்டில் பிராந்திய ஒருமைப்பாடு, இறையாண்மை மற்றும் சுதந்திரத்தைப் பெறுவதற்காக, பயங்கரவாதத்தைத் தோற்கடித்த 12 ஆவது ஆண்டு போர் வெற்றி தினத்தை முன்னிட்டு, இராணுவத்தினருக்கு பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன.

இராணுவத்தில் (வழக்கமான மற்றும் தன்னார்வப் படை) 452 அதிகாரிகளுக்கு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் பரிந்துரைக்கு அமைவாக பதவியுயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன.

அதேவேளை பாதுகாப்பு அமைச்சின் பரிந்துரையில், 4 ஆயிரத்து 289 இராணுவ அதிகாரிகளுக்கு அடுத்த தரங்களுக்கான பதவி உயர்வுகளும் வழங்கப்பட்டுள்ளன. (எ-4)



# முல்லை. மாவட்டத்தில் இராணுவம் கெடுபிடி

*மக்கள் விசனம்*

**முல்லைத்தீவு, மே 19**

**முல்லைத்தீவுக்குச் செல்வதற்கும், முல்லைத்தீவில் இருந்து வெளியேறுவதற்கும் நேற்று இராணுவம் தடை விதித்தது. புதுக்குடியிருப்பு ஆடைத் தொழிற்சாலையில் ஏற்பட்ட கொரோனாத் தொற்றைக் காரணம் காட்டியிருந்தாலும், முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தை குழப்புதற்காகவே இராணுவம் அவ்வாறு திடீரென தடையை ஏற்படுத்தியது என்று மக்கள் விசனித்தனர்.**

எந்தவித முன் அறிவித்தலும் இன்றி திடீரென வீதியில் இறங்கிய இராணுவத்தினர், தருமபுரம் நெத்தலியாற்றுப் பகுதியில் வீதித் தடையை ஏற்படுத்தி, முல்லைத் தீவுக்குள் நுழையவும், முல்லைத் தீவில் இருந்து வெளியேறவும் தடையை ஏற்படுத்தினர். பல்வேறு தேவைகளுக்காகவும், வெளியில் செல்லும் மக்கள் இந்தச் சம்பவம் தொடர்பில் விசனித்ததுடன், முள்ளிவாய்க்கால் நினைவேந்தலைத் தடுக்கும் வகையிலேயே இராணுவம் இவ்வாறான செயலில் திடீரென ஈடுபட்டது என்றும் தெரிவித்தனர்.

எனினும், புதுக்குடியிருப்பு ஆடைத் தொழிற்சாலையில் ஏற்பட்ட கொரோனாத் தொற்றுக் காரணமாகவே மாவட்டங்களுக்கிடையிலான போக்குவரத்து தடைசெய்யப்படுள்ளது என்று இராணுவத்தினர் தெரிவித்தனர். (ப-113)

# தமிழர்கள் என்பதாலேயே நினைவேந்தலுக்குத் தடை

*உறவுகள் கவலை*

வவுனியா, மே 19

நினைவேந்தலுக்கான தடை உத்தரவு உலகப் பாரம்பரியத்தை எதிர்க்கிறது. உலகில் எந்த நீதிமன்றங்களும் தங்கள் சொந்த உறவுகளின் நினைவு தினங்களை அனுஷ்டிப்பதற்கு தடுப்பதில்லை. இறந்தவர்கள் தமிழர்கள் என்பதாலேயே இலங்கையில் இப்படி நடக்கிறது என்று வவுனியாவில் தொடர் போராட்டத்தை மேற்கொள்ளும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் அவர்கள் தெரிவிக்கையில்;

ஒவ்வொரு தமிழர்களுக்கும், இன்று ஒரு புனித நாள். சிங்கள இராணுவத்தால் படுகொலைசெய்யப்பட்டவர்கள், எதிர்காலத் தமிழர்களுக்காக தங்கள் சொந்த வாழ்க்கையை அர்ப்பணித்தவர்கள். தங்கள் தாயகத்தில் பாதுகாப்பான மற்றும் பாதுகாக்கப்பட்ட நிலத்துடன் அச்சமின்றி தமிழர்கள் வாழ வேண்டும் என்பதே இனப்படுகொலைக்குள்ளான தமிழர்களின் கனவு.

முள்ளிவாய்க்காலில் ஒரு லட்சத்து 46 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் படுகொலைசெய்யப்பட்டனர். தமிழர்கள் இன்னும் சிங்கள பௌத்த மத ஒடுக்குமுறை மற்றும் அவர்களின் ஆக்கிரமிப்பால் பாதிக்கப்பட்டுள்ளனர். 11 அரச திணைக்களங்கள் சிங்கள பௌத்த தத்துவத்தை செயற்படுத்துகின்றன. இந்த அரச திணைக்களங்களால் தமிழர்களின் நிலங்கள் தினமும் பறிக்கப்படுகின்றன. அரசின் இனப்படுகொலை நடவடிக்கைகளுக்கு எந்த தமிழ் அரசியல்வாதிகளும் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. சிங்கள பௌத்தர்களால் நிலம் கையகப்படுத்தப்படுவதை எதிர்க்க தமிழ் அரசியல்வாதிகளை செயற்படுமாறு நாங்கள் வேண்டுகிறோம். தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ் எம்.பி.க்களின் ஒரே கடமை அது. காணாமல் ஆக்கப்பட்ட தமிழர்களின் உறவினர்களாகிய நாங்கள், ராஜபக்சக்களின் தொடர்ச்சியான இனப் படுகொலை நடவடிக்கையைத் தடுக்க எங்கள் அரசியல்வாதிகள் தவறிவிட்டார்கள் என்று நம்புகிறோம். தமிழ் இனப் படுகொலையைத் தடுக்க அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் இந்தியாவை அழைப்பதே முன்னோக்கிய வழி. எங்கள் நினைவு நாளுக்கும் வவுனியாவின் நீதிமன்றத்தின் தடை உத்தரவுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. இந்த தடை உத்தரவு உலகப் பாரம்பரியத்தை எதிர்க்கிறது - என்றனர். (ப-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'ஸூம்' செயலியூடாகவும் கூட்டு நினைவேந்தல்

**யாழ்ப்பாணம், மே 19**
**முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு 'ஸூம்' தொழில் நுட்பத்தின் மூலம் இணையவழியிலும் இடம்பெற்றுள்ளது.**



தமிழ் இனத்தின் மீது இலங்கை அரசு திட்டமிட்டு மேற்கொண்ட இனப்படுகொலையின் 12ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வை கொவிட்19 வைரஸ் பரவல் காரணமாக அனைத்து தமிழ் மக்களும் ஒன்றாகத் திரண்டு நினைவேந்த முடியாத நிலையில் வீடுகளில் இருந்து நினைவேந்துமாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கோரியிருந்தது. அதன் பிரகாரம் வீடுகளில் இருந்து தமிழின அழிப்பு நினைவேந்தலை மேற்கொண்டவாறு ஸூம் இணைய செயலி ஊடாக இணைந்து கூட்டுப் பிரக்ஞையை வெளிப்படுத்தும் இந் நிகழ்வு இரண்டு மணி நேரங்களுக்கும் அதிகமாக இடம்பெற்றிருந்தது.

இந்த நினைவேந்தல் நிகழ்வில் நூற்றுக்கும் மேற்பட்டோர் உணர்வு பூர்வமாகக் கலந்து கொண்டிருந்தனர்.

முற்பகல் 10.30 மணிக்கு அனைவரும் இணைந்து இனப்படுகொலைக்கு உள்ளாக்கப்பட்ட தமிழ் மக்களின் ஆத்ம சாந்திக்காக இரண்டு நிமிடங்கள் அகவணக்கம் செலுத்தினர். முற்பகல் 10.32 மணிக்கு அனைவரும் தங்கள் வீடுகளில் இருந்தவாறு சமநேரத்தில் கூட்டாக சுடரேற்றி வணக்கம் செலுத்தினர். அதனைத் தொடர்ந்து மலர் வணக்கம் செலுத்தப்பட்டது. (ப)

# நன்றி நவிலல்



அன்னை மடியில் 27 . 09 . 1943

ஆண்டவன் அடியில் 09 . 04 . 2021

## அமரர் சு.ந. தெட்சணானந்தமூர்த்தி
**(ஓய்வு பெற்ற மக்கள் வங்கி பாதுகாப்பு அத்தியட்சகர்)**

கடந்த 09.04.2021 வெள்ளிக்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத்-தலைவர் அமரர் சு.ந. தெட்சணானந்தமூர்த்தி (ஓய்வு பெற்ற மக்கள் வங்கி பாதுகாப்பு அத்தியட்சகர்) அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் கடந்த 07.05.2021 வெள்ளிக்கிழமை அன்று கல்லாறு புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய கிரியைகள் கடந்த 09.05.2021 ஞாயிற்றுக்கிழமை அன்று அன்னாரது வவுனியா இல்லத்திலும் நடைபெற்றது.

அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு நேரில் வருகை தந்தவர்களுக்கும் தொலைபேசி மூலம் ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும் மலர் வளையங்கள், பதாகைகள், கண்ணீர் அஞ்சலிகள் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவி செய்தவர்களுக்கும், அவர் வைத்தியசாலையில் இருந்தபோது அன்புடன் கவனித்துக்கொண்ட வைத்தியர்கள், தாதியர்களுக்கும் மற்றும் அவருக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

தற்போது கொரோனா தொற்றினால் நிலவும் இக்கட்டான சூழ்நிலை காரணமாக அன்னாரின் இறுதிக்கிரியையில் கலந்து கொண்ட அனைவரையும் வீட்டுக் கிருத்திய நிகழ்வுக்கு அழைக்க முடியாமைக்கு மிகவும் மனம் வருந்துகின்றோம்.

**குடும்பத்தினர்.**

# மாஸ்க் அணியாத வியாபாரிக்கு தொற்று

சாவகச்சேரி, மே 19

முகக்கவசம் அணியாமல் வெற்றிலை வியாபாரத்தில் ஈடுபட்ட வேளையில் தனிமைப்படுத்தப்பட்ட வியாபாரிக்கு பி.சி.ஆர்.பரிசோதனையில் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

தென்மராட்சி தெற்கைச் சேர்ந்த குறித்த நபர் வடமராட்சி பகுதியில் உள்ள சந்தையில் வெற்றிலை வியாபாரம் செய்து வருகிறார். கடந்த வாரம் அப் பகுதி சுகாதாரப் பகுதியினர் மற்றும் பொலிஸார் இணைந்து சந்தையில் நடாத்திய பரிசோதனையில் முகக்கவசம் அணியாமல் வியாபாரத்தில் ஈடுபட்டார் என தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டார்.

இவருக்கு சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில், வட்டுக்கோட்டை சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, கைதடியில் உள்ள சைவ உணவக உரிமையாளர் மற்றும் சக ஊழியர்கள் இருவர் என மூவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டதால் அயல் கடை உரிமையாளர்களுக்கு நடத்தப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் குறித்த நபருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இவருடன் விளையாட்டுப் பயிற்சியில் ஈடுபட்டவர்கள் மற்றும் திருமண நிகழ்வில் கலந்துகொண்ட குடும்பத்தினரும் சுகாதாரப் பகுதியினரால் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். (ந-9)





# முல்லை நகர் முடக்கம்: பஸ் சேவைகள் நிறுத்தம்

சாவகச்சேரி,மே 19


முல்லைத்தீவு நகரப் பகுதி முடக்கப்பட்டதால் அங்கிருந்து பயணிக்கும் பஸ்கள் அனைத்தும் நேற்று நிறுத்தப்பட்டன.

முல்லைத்தீவு முள்ளியவளை மற்றும் புதுக்குடியிருப்பு ஆகிய பொலிஸ் பிரிவுகள் நேற்று முடக்கப்பட்டன.

முல்லைத்தீவு பஸ் நிலையம் மற்றும் டிப்போ போன்றவை குறித்த பகுதிக்குள் இருப்பதால் அங்கு பணியாற்றுவோர் உள்ளே செல்ல முடியாததாலும் பஸ் சேவைகள் நேற்று இடம்பெறவில்லை.

இதனால் காலை மாலை வேளைகளில் பஸ்களில் பயணிக்கும் அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் பணிபுரிவோர் நீண்ட நேரம் பஸ் வராததால் அலுவலகங்களுக்கு தாமதமாகவே வந்தனர் எனத் தெரிவித்தனர்.

இதேவேளை போக்குவரத்து சேவைகள் நிறுத்தப்பட்ட தால் யாழ்ப்பாணம் மருத்துவமனைக்கு செல்வோர் மற்றும் சந்தைகளுக்கு உற்பத்திப் பொருள்கள் கொண்டு செல்வோர் உள்ளிட்ட பொதுமக்கள் சிரமங்களை எதிர்நோக்கினர். (ஐ-9)





# சாவகச்சேரியில் நேற்று 104 பேருக்கு பி.சி.ஆர்.

சாவகச்சேரி,மே 19

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தினரால் நேற்று 104 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. பிரதேசத்தில் தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் மற்றும் கொடிகாமம் பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கே பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு ஆய்வுக்காக யாழ்ப்பாணம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ஐ- 9)

# சாவகச்சேரியில் இந்த மாதத்தில் 77 தொற்றாளர்கள்

சாவகச்சேரி மே. 19

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் மே மாதத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை வரை 77 பேரும், கடந்த ஜனவரி தொடக்கம் நேற்று வரையான காலப்பகுதியில் 181 பேரும் கொரோனாத் தொற்றுக்கு இலக்காகியுள்ளனர் என குறித்த பிரிவில் உள்ள ஏழு பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுகளிலிருந்து பெறப்பட்ட தரவுகளிலிருந்து தெரியவந்துள்ளது.

இதனடிப்படையில், நாவற்குழி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் 34 பேரும், எழுதுமட்டுவாழ் பிரிவில் 33 பேரும், சாவகச்சேரி நகரம் மற்றும் மட்டுவில் ஆகிய பிரிவுகளில் தலா 23 பேரும், கைதடி பிரிவில் 21 பேரும் கொடிகாமம் பிரிவில் 20 பேரும், வரணி பிரிவில் 11 பேரும், மந்துவில் பிரிவில் 6 பேரும் தொற்றுக்கு இலக்காகியுள்ளனர்.

இதேவேளை, மே மாதத்தில் நேற்று முன்தினம் வரையான காலப்பகுதியில் எழுதுமட்டுவாழ் பிரிவில் 22 பேரும் ,கொடிகாமம் பிரிவில் 15 பேரும் ,சாவகச்சேரி நகரப் பிரிவில் 14 பேரும், மட்டுவில் பிரிவில் 9 பேரும், வரணி பிரிவில் 8 பேரும் கைதடி பிரிவில் 7 பேரும் நாவற்குழி மற்றும் மந்துவில் ஆகிய பிரிவுகளில் தலா ஒருவரும் தொற்றால் பீடிக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிய வந்துள்ளது. (ந-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொடிகாமம் வடக்கு, மத்தி தனிமையிலிருந்து நீக்கம்

கொடிகாமம், மே 19
கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் காரணமாக தனிமைப்படுத்தப்பட்டிருந்த கொடிகாமம் வடக்கு மற்றும் கொடிகாமம் மத்தி ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகள், நேற்று செவ்வாய்க்கிழமை காலை 6 மணி முதல் தனிமைப்படுத்தலிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளன.
கொடிகாமம் சந்தை உள்ளிட்ட வர்த்தக தொகுதியில் பலருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டதால், கொடிகாமம் வடக்கு மற்றும் கொடிகாமம் மத்தி ஆகிய இரண்டு கிராம சேவையாளர் பிரிவுகளும் கடந்த 4ஆம் திகதி இரவு முதல் தனிமைப்படுத்தப்பட்டன. இந்த நிலையில் நேற்றுக் காலை முதல் குறித்த கிராம சேவையாளர் பிரிவுகள் விடுவிக்கப்பட்டுள்ளன. (ந-26)





## வழமைக்குத் திரும்பின வர்த்தக நடவடிக்கைகள்

கொடிகாமம், மே 19
கொடிகாமம் பொதுச் சந்தை மற்றும் வர்த்தக நிலையங்கள் நேற்று செவ்வாய்க்கிழமை காலை முதல் தமது வர்த்தக நடவடிக்கைகளை மீள ஆரம்பித்துள்ளன. கொரோனாத் தொற்று காரணமாக கொடிகாமம் மத்தி (J/326) மற்றும் கொடிகாமம் வடக்கு (J/327) ஆகிய கிராம சேவகர் பிரிவுகள் முடக்கப்பட்டிருந்த நிலையில், நேற்று காலைமுதல் முடக்கத்தில் இருந்து விடு விக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் மீன் விற்பனை, மரக்கறி விற்பனை மற்றும் தேங்காய் விற்பனை ஆகியவை உட்பட வர்த்தக நிலையங்கள் வழமை போன்று இயங்க ஆரம்பித்துள்ளன.
முடக்கப்பட்ட பிரதேசங்கள் விடுவிக்கப்பட்டபோதும் கொடிகாமம் ஏ9 வீதியில் போடப்பட்ட இராணுவத் தடைகள் அகற்றப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ந-159)

## சாவகச்சேரி நகரசபை செயலருக்கு தொற்று

தவிசாளர் உட்பட உறுப்பினர்கள் தனிமைப்படுத்தலில்

சாவகச்சேரி,மே 19
சாவகச்சேரி நகரசபையின் தவிசாளர் மற்றும் உபதவிசாளர் உள்ளிட்ட அனைத்து உறுப்பினர்களும் சுகாதாரப் பகுதியினரால் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். சபையின் செயலாளருக்கு கொரோனா உறுதிப்படுத்தப்பட்டது.
இதனையடுத்து கடந்த வாரம் நடைபெற்ற சபையின் விசேட அமர்வு மற்றும் மாதாந்த அமர்வு போன்றவற்றில் பங்குபற்றிய அனைத்து உறுப்பினர்களும் நேற்றுமுன்தினம் தொடக்கம் அவர்களது வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.
இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்களின்பி.சி.ஆர். முடிவுகள் கிடைக்கும் வரை அலுவலகம் மூடப்பட்டு இருக்கும் என்று தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் அறிவித்துள்ளார்.(ஜ-9)

## அ. அட்டை நடைமுறை கடுமையாக கண்காணிப்பு



வவுனியா,மே 19
வவுனியாவில் அடையாள அட்டைஇலக்க நடைமுறை பொலிஸாரால் கடுமையாக கண்காணிக்கப்பட்டு வருகிறது.
நாடு தழுவியதாக நடைமுறைப் படுத்தப்பட்டிருந்த சமூக முடக்கல் நேற்றுமுன்தினம் விலக்கிக்கொள்ளப்பட்டதை அடுத்து வவுனியாவில் தேசிய அடையாள அட்டை இலக்க நடைமுறை தீவிரமாக கண்காணிக்கப்பட்டு வருகிறது.
நேற்றையதினம்இரட்டை இலக்கத்துடன் முடிவடையும் தேசிய அடையாள அட்டை இலக்கத்தைக் கொண்ட நபர்கள் மாத்திரம் வெளியில் நடமாட முடியும்.
குறித்த நடைமுறையில் பொதுமக்களது நடமாட்டத்தை பரிசோதிக்கும் வகையில் வவுனியா நகரப் பகுதியில் உள்நுளையும் பகுதிகளில் பொலிஸார் தீவிர சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.
கண்காணிப்பின்போது அதிகமானோர் எச்சரிக்கப்பட்டு திருப்பி அனுப்பப்பட்டும் வருகின்றனர். (ஜ-110)

## மூடப்பட்டது பரு. மீன் சந்தை

பருத்தித்துறை, மே 19
பருத்தித்துறை மீன் சந்தை சுகாதாரத் துறையினரின் அறிவுறுத்தலின்படி மறு அறிவித்தல்வரை மூடப்பட்டுள்ளது. குறித்த சந்தைப் பகுதியில் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாமல் வியாபார நடவடிக்கைகள் இடம்பெற்றன என பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையில், பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரியின் அறிவுறுத்தலின்படி இச் சந்தைப் பகுதி மூடப்பட்டுள்ளது. (ந-20)

## ரவிகரன், சிவாஜி மீதான வழக்கு ஒக்ரோபர் மாதம் வரை ஒத்திவைப்பு

முல்லைத்தீவு, மே 19
ரவிகரன் மற்றும் சிவாஜிலிங்கம் உள்ளிட்ட நால்வர் மீதான வழக்கு விசாரணை, கொவிட் - 19 அசாதாரண சூழ்நிலையால் எதிர்வரும் ஒக்ரோபர் மாதத்துக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. கடந்த 2018 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முல்லைத்தீவு வட்டுவாகல் பகுதியில் மக்களுக்குச் சொந்தமான 617 ஏக்கர் காணியை அபகரிக்கச் சென்ற நில அளவீட்டாளர்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, கோத்தாபய கடற்படை முகாமுக்கு முன்பாக மக்கள் போராட்டத்தில் கலந்துகொண்டனர் என்று தெரிவித்து, வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், மற்றும் எம்.கே.சிவாஜிலிங்கம் உள்ளிட்ட நால்வருக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கின் விசாரணை நேற்றுமுன்தினம் முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில் இடம்பெற்றது. இந்த நிலையில் கொவிட் 19 அசாதாரண சூழ்நிலை காரணமாக குறித்த வழக்கு விசாரணைகள் எடுத்துக்கொள்ளப்படாது எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 12 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.
வழக்கின் விசாரணைகள் கடந்த மூன்று வருடங்களுக்கு மேலாக இடம்பெற்றுவரும் நிலையில் நேற்றும் விசாரணைக்காக தவணையிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ப-246)

# சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் ஆலய மற்றுமொரு குருக்களுக்கும் கொரோனா!

### திருவிழா நிறுத்தப்பட்டது


வலி.தென்மேற்கு, மே 19
சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தின் கொடியேற்றத் திருவிழாவை நடத்திய 2ஆவது குருக்களுக்கும் கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளதால், திருவிழா நிறுத்தப்பட்டு, ஆலயம் மூடப்பட்டுள்ளது.
கொரோனாத் தொற்று ஏற்பட்ட குருக்களே திருவிழாவில் கலந்துகொள்ளும், பக்தர்களுக்கு திருநீறு பூசி விடுவதால், சுதுமலையில் சமூகத் தொற்று அதிகரிக்கும் ஆபத்து உள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.
சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் இம்மாதம் 9ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி திருவிழா தொடர்ந்து இடம்பெற்று வந்தது. இந்நிலையில் ஆலயத்தில் கொடியேற்றிய குருக்கள் கொடியேற்றத்துக்கு முன்பு நயினாதீவுக்கு சென்ற போது அங்கு அடையாளப்படுத்தப்பட்ட கொரோனா நோயாளி ஒருவருடன் தொடர்பு ஏற்படுத்தியிருந்தார் என்ற தகவலை அடுத்து, பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் அறிவுறுத்தலுக்கு அமைய ஆலயத்தில் கொடியேற்றிய குருக்கள் மூன்றாம் திருவிழாவுடன் தனிமைப்படுத்தப்பட்டார்.
பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் தனிமைப்படுத்தப்பட்ட குருக்கள் பி.சி.ஆர் அறிக்கையைத் தொடர்ந்து மீண்டும் ஆலயத்துக்குச் சென்று பூசையில் ஈடுபட்டிருந்தார். இரு தினங்களுக்குப் பின் மீண்டும் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் குருக்களுக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டுள்ளார். இதையடுத்து சுகாதாரப் பிரிவினரின் ஆலோசனைக்கமைய ஆலயம் மூடப்பட்டுள்ளது. ஒன்பதாம் திருவிழாவில் இருந்து திருவிழா நிறுத்தப்பட்டுள்ளது. ஆலய தர்மகர்த்தா, சபை உறுப்பினர் உட்பட அங்கு கடமையிலிருந்த ஊழியர் அனைவரும் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டு உள்ளனர். (ப-115)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவழியா நினைவேந்தல்

**முள்ளிவாய்க்காலில் உயிர்நீத்த உறவுகளை நினைந்து நினைவேந்தல் நிகழ்வுகள் உணர்வுபூர்வமாக நேற்று தடைகளைத் தாண்டியும் கடைப்பிடிக்கப்பட்டன. அவற்றின் சில பதிவுகள் இவை.**

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்....





நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன்....



முள்ளிவாய்க்காலில் வேலன் சுவாமிகள்...



யாழ்.பல்கலையில்...



நாடாளுமன்ற கட்டத் தொகுதி...



தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி....



கரைச்சி பிரதேச சபையில்...




மன்னாரில்...



வலி.கிழக்கில்...



தமிழர் வாழ்வுரிமை இயக்கம்




நந்திக்கடலில்....




புதிய ஜனநாயக மாக்சிச கட்சி...



யாழ்.மாநகர சபையில்...

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மே-18 என்பது இனப்படுகொலை நாள்; ஆயர்களின் அறிக்கை சிறந்த அம்சம்

## அருட்பணி எஸ்.ஜெயபாலன் அடிகளார் தெரிவிப்பு



**மன்னார், மே 19**

**வடக்கு கிழக்கிலுள்ள நான்கு மறைமாவட்ட ஆயர்களும் முள்ளிவாய்க்கால் தினமாகிய இந்நாளை இன அழிப்பு நாள் என்ற சிந்தனையுடன் இறை வழிபாட்டில் ஈடுபடும்படி ஒன்றித்து அறிக்கையிட்டிருப்பது ஒரு சிறந்த அம்சமாகும் என மன்னார் மறைமாவட்ட மனித உரிமைகள் ஆனைக்குழு இயக்குநர் அருட்பணி எஸ்.ஜெயபாலன் அடிகளார் தெரிவித்தார்.**

மன்னாரில் தமிழ்த்தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வில் கலந்துகொண்டு அவர் மேலும் தெரிவிக்கையில்;

முள்ளிவாய்க்காலில் இறந்தவர்களை நினைத்து. அவர்களின் ஆன்ம இளைப்பாற்றுக்காக இறைவேண்டுதல் செய்யும் நாள் இன்றாகும்.

இவ்வருடம் இவ்விடயத்தில் ஒரு சிறப்பு அம்சமாக இருப்பது வடக்கு கிழக்கிலுள்ள நான்கு மறைமாவட்டங்களின் கத்தோலிக்க ஆயர்கள் ஒன்றாக இணைந்து இந்த நாளை ஒரு இன அழிப்பு நாள் என நினைவுகூர்ந்து நாம் இதை அனுசரிப்போம் என அறிக்கைவிட்டுள்ளனர்.

இந்த நாளில் சகல ஆலயங்களிலும் பிற்பகல் ஆறு மணிக்கு மணி இசைத்தும், கொவிட் 19 இன் காரணமாக வீடுகளில் இருந்தவாறும் ஆலயங்களிலும் இறை வழிபாடு செய்யும்படி எமக்குத் தெரிவித்துள்ளனர்.

இன்று நாம் கஞ்சி பரிமாறுகின்றோம். இது வெறுமனே கஞ்சி அருந்துவதல்ல. மாறாக ஒவ்வொரு வருடமும் நாம் இந்தக் கஞ்சியை இந்த நாள்களில் அருந்தும்போது முள்ளிவாய்க்கால் நினைவுடன் எமது விடுதலை வேட்கையை எமது எதிர்காலச் சமுதாயத்துக்கு தெரிவிக்கும் ஒரு சந்தர்ப்பமாகவும் அமைய வேண்டும். நாம் இலைக் கஞ்சியை வழங்கும் போது இலை பசுமையானது இன விடுதலையை நோக்கி பயணிக்கும் ஒரு பசுமையான சிந்தனையை தூண்டும் என நினைக்கின்றேன் -என்றார். (ப-60)





## வவு.கருமாரி அம்மன் கோவிலில் மே-18 ஆத்மசாந்தி பிரார்த்தனை

வவுனியா,மே.19

முள்ளிவாய்க்கால் மண்ணில் படுகொலை செய்யப்பட்ட தமிழ் மக்களுக்கான ஆத்ம சாந்திப்பிரார்த்தனை நிகழ்வு வவுனியா, குட்செட் வீதி கருமாரி அம்மன் கோவிலில் நேற்று இடம்பெற்றது.

வவுனியா தமிழ் விருட்சம் அமைப்பு மற்றும் கருமாரி அம்மன் கோவில் நிர்வாகத்தினரின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் அந்தணர் ஒன்றியத்தின் செயலாளரும் ஆலயத்தின் பிரதம குருவுமான பிரபாகரக் குருக்களால் விசேட வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டதுடன் உயிரிழந்த ஆத்மாக்களின் நினைவாக நெய் விளக்குகள் ஏற்றப்பட்டன. வழிபாடுகளில் சமூக ஆர்வலர்கள், உறவுகளை இழந்தவர்கள் என குறிப்பிட்ட அளவிலானோர் சுகாதார நடைமுறைகளை கடைப்பிடித்து கலந்துகொண்டனர். இதேவேளை பூசை நிகழ்வுகள் இடம்பெற்றபோது ஆலயத்தின் வளாகத்தில் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் பூசையில் கலந்துகொண்டிருந்தவர்களின் அடையாள அட்டையை பரிசோதித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ப-110)


## அறிவகத்திலும் அஞ்சலி

கிளிநொச்சி, மே 19

முள்ளிவாய்க்காலில் படுகொலை செய்யப்பட்ட உறவுகளுக்கு நேற்று கிளிநொச்சியில் உள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அறிவகத்தில் சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது.

முள்ளிவாய்கால் படுகொலையின் 12ஆவது ஆண்டு நினைவு நாளான நேற்று பல இடங்களில் அஞ்சலி செலுத்தப்பட்ட நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரனும் இந்த அஞ்சலி நிகழ்வில் ஈடுபட்டிருந்தார்.

நிகழ்வில் வடக்கு மாகாண சபையின் முன்னாள் கல்வி அமைச்சர் குருகுலராஜா, கரைச்சி மற்றும் பச்சிலைப்பள்ளி பிரதேச சபைகளின் தவிசாளர்கள் உறுப்பினர்கள் கட்சியின் உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ப-214)








## கொல்லப்பட்ட உறவுகளுக்காக போராடும் உறவுகள் அஞ்சலி

வவுனியா, மே 19

முள்ளிவாய்க்கால் மண்ணில் படுகொலை செய்யப்பட்டவர்களுக்கு, காணாமல் ஆக்கப்பட்டவர்களைக் கண்டறிந்து தருமாறு கோரிப் போராடும் உறவினர்களால் அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது.

வவுனியா பூந்தோட்டம் லயன்ஸ் விளையாட்டு கழக மைதானத்தில் அமைந்துள்ள சுனாமி நினைவுத்தூபியில் குறித்த அஞ்சலி நிகழ்வு நேற்றுக் காலை இடம்பெற்றது. (ப-110)



## முள்ளிவாய்க்கால் மண்ணில் வேலன் சுவாமிகள் அஞ்சலி

முள்ளிவாய்க்கால், மே 19

முள்ளிவாய்க்கால் தமிழின பேரவலத்தின் 12 ஆம் ஆண்டு நினைவேந்தல் நாளான நேற்று பலத்த பாதுகாப்பு கெடுபிடிகளுக்கு மத்தியில் முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் பகுதியில் சிவ குரு ஆதீன குரு தவத்திரு வேலன் சுவாமிகள் இறுதிப்போரில் உயிரிழந்த உறவுகளுக்கு சுடரேற்றி அஞ்சலி செலுத்தியுள்ளார்.

இந்த நினைவேந்தல் நிகழ்வு இறுதிப் போர் உச்சம் பெற்ற முள்ளிவாய்க்கால் பகுதியின் ஒரு பகுதியில் இடம்பெற்றுள்ளது. உயிரிழந்த உறவுகளுக்கு அக வணக்கம் செலுத்தப்பட்டு சுடர் ஏற்றப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டு நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளது.


நேற்றுமுன்தினம் இரவு முதல் முல்லைத்தீவு மாவட்டத்தின் முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு மற்றும் முள்ளியவளை பொலிஸ் பிரிவுகளில் தனிமைப்படுத்தல் முழு ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டு இராணுவம், பொலிஸ் மற்றும் புலனாய்வாளர்களின் கண்காணிப்பு பலப்படுத்தப்பட்டுள்ள நிலையில் பாதுகாப்பு தரப்பின் கண்களில் அகப்படாது இந்த நினைவேந்தல் சிறப்பான முறையில் முள்ளிவாய்க்கால் மண்ணில் இடம்பெற்றுள்ளது. வேலன் சுவாமிகளோடு இணைந்து பொதுமக்கள் சிலரும் இந்த அஞ்சலி நிகழ்வில் கலந்துகொண்டு உறவுகளை நினைந்து அஞ்சலி செலுத்தியுள்ளனர். இனப்படுகொலையின் நினைவாக பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி மக்கள் பேரியக்கத்தால் ஒரு லட்சத்து 46 ஆயிரம் மரக்கன்றுகள் நடும் திட்டத்துக்கு அமைவாக முதலாவது ஆலமரக் கன்று ஒன்றும் இந்த நினைவேந்தல் நிகழ்வின் போது முள்ளிவாய்க்கால் மண்ணில் வேலன் சுவாமிகளால் நடுகை செய்யப்பட்டுள்ளது. (ப-20)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பயண முடக்கத்திலும் மணல் அகழ்வு தாராளம்

## கண்டுகொள்ளாத பொலிஸார்

**முல்லைத்தீவு,மே 19**




**முல்லைத்தீவு - புத்துவெட்டுவான் ஆற்றுப்படுகைகளில் அரசால் பயணத் தடை விதிக்கப்பட்ட காலங்களிலும் மணல் அகழ்வு நடவடிக்கை இடம்பெறுகின்றது என்று அப்பகுதி மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.**

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்;

கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக தொடர்ச்சியாக முல்லைத்தீவு மாவட்டத்தில் மணல் அகழ்வு இடம்பெறும் கிராமமாக புத்துவெட்டுவான் கிராமம் காணப்படுகின்றது. கிராமத்தின் மணல் அகழ்வைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுங்கள் என மாவட்டச் செயலகத்துக்கு பல தடவைகள் கிராம மக்களால் மனு மூலம் முறைப்பாடுகள் செய்யப்பட்டும், மணல் அகழ்வு தடுத்து நிறுத்தப்படவில்லை. துணுக்காய் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் புத்துவெட்டுவானில் நடைபெறுகின்ற மணல் அகழ்வு தொடர்பாக தகவல்கள் தெரிவிக்கப்பட்டாலும், அதிகாரிகளும் இணைத் தலைவர்களும் மணல் அகழ்வு நடைபெறும் இடங்களுக்கு வருகைதருவார்கள் என்று வாக்குறுதிகள் வழங்கப்பட்டாலும் அவ்வாறு ஒருவரும் வருகை தருவதில்லை.

கிராமத்தை பேரழிவுக்குக் கொண்டு செல்லும் வகையில் தொடர்ச்சியாக மணல் அகழ்வு நடைபெறுகின்றது. பயணத் தடை காலங்களில் ஆற்றுப்படுகைகளில் இருந்து உழவு இயந்திரங்கள் மூலம் குவிக்கப்படும் மணல், பயணத் தடைகள் நீக்கப்பட்ட பின்னர் வெளியிடங்களுக்கு டிப்பர்களில் மணல் கொண்டு செல்லப்படுகின்றது.

எனவே இது தொடர்பில் அதிகாரிகள் விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றனர். (ஐ-13)



முள்ளிவாய்க்கால் நிகழ்வை செய்தி சேகரிக்கச் சென்ற

# ஊடகவியலாளர்களுடன் மல்லுக் கட்டிய பொலிஸ்

வவுனியா, மே 19

தமிழ் விருட்சம் அமைப்பு மற்றும் கருமாரி அம்மன் கோவில் நிர்வாகத்தினரின் ஏற்பாட்டில் முள்ளிவாய்க்கால் மண்ணில் கொல்லப்பட்ட தமிழ் மக்களுக்கான ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வு குட்செட் வீதி கருமாரி அம்மன் கோவிலில் நேற்று இடம்பெற்றது.

அதனை செய்தியாக்கச் சென்ற வவுனியா பிராந்திய ஊடகவியலாளர்களுடன் வவுனியா தலைமை பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸார் மல்லுக்கட்டியதுடன், அடையாள அட்டையை காண்பிக்குமாறும் வலியுறுத்தியுள்ளனர்.

அரச தகவல் திணைக்களத்தால் வழங்கப்பட்ட ஊடக அடையாள அட்டையை பொலிஸாருக்கு காண்பித்த நிலையில் அதனை தவிர்த்துவிட்டு தேசிய அடையாள அட்டயை காண்பிக்குமாறு அவர்கள் தெரிவித்துள்ளனர். தேசிய அடையாள அட்டையின் பிரகாரமே வெளியில் வரமுடியும் என்றும் அனைவருக்கும் ஒரே நடைமுறையே என்றும் பொலிஸார் கடுமையாக எச்சரித்துள்ளனர். (ப-18)

# முட்டிக்குள் இருந்து கைக்குண்டுகள் மீட்பு

வவுனியா,மே 19

வவுனியா - பூவரசங்குளம் பகுதியில் உள்ள தோட்டக் காணியில் உள்ள முட்டி ஒன்றுக்குள் இருந்து கைக்குண்டுகளை பூவரசங்குளம் பொலிஸார் நேற்றுமுன்தினம் மீட்டுள்ளனர்.

குறித்த தோட்டக் காணியை அதன் உரிமையாளர் உழவியந்திரம் மூலம் பண்படுத்தியுள்ளார். பண்படுத்தப்பட்டபோது காணிக்குள் முட்டி ஒன்றினுள் கைக்குண்டுகள் இருப்பதை அவதானித்துள்ளார்.

பின்னர் குறித்த விடயம் பூவரசங்குளம் பொலிஸாருக்கு தெரியபடுத்தபட்டது. இதனையடுத்து சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் முட்டி ஒன்றுக்குள் இருந்து 30 கைக்குண்டுகளை மீட்டுள்ளனர்.

மண்ணில் புதையுண்டு மேலும் பல வெடிபொருள்கள் இருக்கலாம் என்று தெரிவித்த பொலிஸார், சம்பவம் தொடர்பாக விசேட அதிரடி படையினருக்கும் தகவல் தெரிவித்தனர்.

நீதிமன்றின் அனுமதியுடன் குறித்த பகுதியில் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ஐ-110)





# தொற்றுக்கு மத்தியிலும் மன்னாரில் தொடரும் கஞ்சா கடத்தல்

மன்னார்,மே 19

பதுக்கி வைக்கப்பட்டிருந்த நிலையில் சுமார் 14 கிலோ நிறையுடைய கேரளக் கஞ்சாவை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

மன்னார் பேசாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மன்னார் பேசாலை 8ம் வட்டாரம் யூட் வீதி காட்டுப் பகுதியில் இருந்து கடந்த சனிக்கிழமை மாலை குறித்த கஞ்சா கைப்பற்றப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மன்னார் மாவட்ட மூத்த பொலிஸ் அத்தியட்சகர் பண்டுள்ள வீரசிங்கவின் பணிப்பில், உதவி பொலிஸ் அத்தியட்சகர் கஸ்தூரி ஆராய்ச்சி மற்றும் பேசாலை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பி.பொ.ப. சோமயித், உ.பொ.ப. விவேகாணந் தலைமையிலான அணியினரே மேற்படி கேரளக் கஞ்சாவை கைப்பற்றினர். மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-213)

# தனிமையிலுள்ள குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள்

வவுனியா,மே 19

வவுனியாவில் தனிமைப்படுத்தப்பட்ட 15 குடும்பங்களுக்கு 10 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

அரசாங்கத்தால் தனிமைப்படுத்தப்படும் குடும்பங்களுக்கு 5 ஆயிரம் ரூபா பெறுமதியான இரண்டு பொதிகள் குடும்பம் ஒன்றுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. அதனடிப்படையில் வவுனியா பிரதேச செயலகத்துக்கு வழங்கப்பட்ட பொதிகளை, பிரதேச செயலகத்தின் சிறுவர் பெண்கள் பிரிவைச் சேர்ந்த பெண் உத்தியோகத்தர்கள் முன்வந்து அதனைப் பெற்று தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கு வழங்கினர்.

வவுனியா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட வெளிக்குளம், தச்சங்குளம், மரக்காரம்பளை, நெளுக்குளம் மற்றும் கந்தபுரம் ஆகிய கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த 15 குடும்பங்களுக்கே இந்த உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (ஐ-18)

# தாக்குதலில் காயமடைந்த இருவர் மருத்துவமனையில்

சாவகச்சேரி,மே 19

கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு காயங்களுக்கு உள்ளான இருவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த தாக்குதல் சம்பவம் மட்டுவில் வடக்குப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-9)


பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ் இந்து மகளிர் கல்லூரியில் கல்வி பயின்று 2020 இல் இடம்பெற்ற கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் உயிர் முறைமைகள் தொழினுட்பவியல் பிரிவில் 3A சித்தியைப் பெற்று மாவட்ட ரீதியில் 1ஆம் இடத்தினையும் தேசிய ரீதியில் 6ஆம் இடத்தினையும் பெற்ற

செல்வி கமலநாதன் மதுஜா



அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆசியுடன் மேலும் பல பட்டங்களைப் பெற்று பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்.

Wishes

வாழ்த்துவோர்:

அப்பா, அம்மா, அண்ணா, அக்கா, அத்தான், பெறாமகள், அம்மம்மா.

நந்தாவில் அம்மன் வீதி, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 31ஆம் நினைவு நாளும் நன்றி நவிலலும்

பூவுலகில் 12 . 03 . 1940



விண்ணுலகில் 19 . 04 . 2021

## அமரர் செல்லப்பா சோமசுந்தரம்

(முன்னாள் மக்கள் வங்கி முகாமையாளர், சமாதான நீதவான், உதைபந்தாட்ட வீரர், மேசைப்பந்தாட்ட வீரரும், பயிற்றுனரும், தினகரன் செய்தியாளர்)

எமது குடும்பத் தலைவர் இறைவனடி எய்திய செய்தி கேள்வியுற்று இறுதிக் கிரியைகளுக்கு நேரில் வருகை தந்தவர்களுக்கும், மக்கள் வங்கி ஓய்வூதியர் சங்கத்தினருக்கும், மக்கள் வங்கி முகாமையாளர், உத்தியோகத்தர்களுக்கும், வல்வெட்டித்துறை நகரசபை, பருத்தித்துறை நகரசபை, வலிகிழக்கு பிரதேசசபை, பணியாளர்களுக்கும், சபை தவிசாளருக்கும், உறுப்பினர்களுக்கும், ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கும், வல்வை மகளிர், உடுப்பிட்டி மகளிர் கல்லூரி அதிபர், ஆசிரியர்களுக்கும், ஓய்வு பெற்ற அதிபர், ஆசிரியர்களுக்கும், இலங்கை தொழில்நுட்ப உத்தியோகத்தர் சங்கம் - வடமாகாண அங்கத்தவர்களுக்கும், உறவினர்கள், நண்பர்களுக்கும், மலர்வளையங்கள், துண்டுப்பிரசுரங்கள், தொலைபேசி, முகப்பு புத்தகம், இணையவழி மூலமும் அஞ்சலி செலுத்திய அனைவருக்கும் நெஞ்சார்ந்த நன்றிகள்.

**குறிப்பு :** ஆத்மசாந்தி பிரார்த்தனை கொவிட் 19 தொற்று காரணமாக குடும்ப அங்கத்தவர்களுடன் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால், அன்றைய தினம் அனைவரும் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**பகவதி கோவிலடி,**
**உடுப்பிட்டி**

**குடும்பத்தினர்**

# மரண அறிவித்தல்

மண்ணில் 14 . 11 . 1942



விண்ணில் 18 . 05 . 2021

## திருமதி நவரத்தினசிங்கம் கிருசாம்பாள்

**(ஓய்வுபெற்ற வர்த்தகப் பாட ஆசிரியர்)**

நயினாதீவு 4ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் சிவலிங்கப்புளியடி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நவரத்தினசிங்கம் கிருசாம்பாள் நேற்றைய தினமான (18.05.2021) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தவனம் சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற செல்லர் நல்லதம்பி, சொர்ணம்மா அவர்களின் மருமகளும், காலஞ்சென்ற நவரத்தினசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், நாகேஸ்வரி (இத்தாலி), நிமலன் (UK), விமலன் (UK), காமினி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தாயாரும், உதயக்குமார் (இத்தாலி), கவிதா (UK), பிரேமளா (UK), ருஜேந்தன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான ஸ்ரீஸ்கந்தராஜா, கனகராசா, கணேசு, சந்திரன் ஆகியோரின் அன்பு சகோதரியும், மற்றும் இலெட்சுமி, ராசம்மா, லலிதாம்பாள், நாகம்மா காலஞ்சென்ற தனலெட்சுமி, பரராசசிங்கம், தங்கலட்சுமி மற்றும் பரமேஸ்வரி, துரைராசசிங்கம், காலஞ்சென்ற ஓங்காரலட்சுமி ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்ற சின்னத்துரை மற்றும் திலோத்தம்மை, பரமேஸ்வரன் நித்தியலட்சுமி, காலஞ்சென்ற கனகசபை மற்றும் கனகம்மா, திருஞானம் சரஸ்வதி ஆகியோரின் சம்பந்தியும், ஜீவிதன், நிருஜன், அனன்யா, ஜனுசா, துசிக்கா, அனுஷாந், அஸ்னவி, அனோஜன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.05.2021) புதன்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**831/27, K.K.S. வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# முடக்கப்பட்ட பகுதிகளுக்காக கொடுப்பனவு வழங்கல் நீடிப்பு

## கொடிகாமம் தபாலகத்தினர் அறிவிப்பு

சாவகச்சேரி, மே 19

கொடிகாமம் அஞ்சல் அலுவலகத்தில் பொதுசன மாதாந்த உதவிப்பணம், முதியோர் கொடுப்பனவு மற்றும் நோய்களுக்கான கொடுப்பனவு ஆகியவை வழங்கப்பட்டு வருகின்றன. இக் கொடுப்பனவுகளை நாளை வியாழக்கிழமைக்கு முன்னர் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரதேச செயலக சமூக சேவைகள் அலகினரால் இக் கொடுப்பனவுகள் கடந்த வாரம், அஞ்சல் அலுவலகத்துக்கு அனுப்பிவைக்கப்பட்ட போதிலும், கொடிகாமம் மத்தி மற்றும் கொடிகாமம் வடக்கு ஆகிய கிராம அலுவலர்கள் பிரிவுகள் கொரோனாத் தொற்றுநிலைமை காரணமாக முடக்கப்பட்டிருந்தன. இதனால் பலர் கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை. இந்நிலையில் மக்கள் நலன்கருதி நாளை 20 ஆம் திகதி வரை கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-9)


**மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு**

HKCD 50 Honda லான்சர் விற்பனைக்கு தரகர் தேவையில்லை. (தனிப்பாவனையில் உள்ளது)

தொடர்பு 077 583 9110


# கஞ்சாவுடன் ஒருவர் கைது

சாவகச்சேரி, மே 19

கெற்பேலி சிவன் கோவிலடிப் பகுதியில் கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் நேற்றுமுன்தினம் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். கிடைத்த இரகசியத் தகவலையடுத்து அங்கு சென்ற படையினர் கோவில் வீதியில் பத்துக்கு மேற்பட்டோர் கூடிநின்றதைக் கண்டனர். படையினரைக் கண்டு ஓடியபோது துரத்திச் சென்ற படையினரிடம் ஒருவர் அகப்பட்டார். அவரிடம் ஒரு தொகை கஞ்சா காணப்பட்டதால் கொடிகாமம் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. கொடிகாமம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-9)


**Happy Retirement Care center**

எமது இல்லத்தில் 60 வயதிற்கு மேற்பட்ட முதியவர்கள் இணைத்துக் கொள்வதற்கான அனுமதிகள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது.

- அமைதியான பாதுகாப்பான சூழல்
- தனிப்பட்ட பராமரிப்பு மற்றும் மருத்துவ வசதிகள்
- மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகள்
- குறைந்த கட்டணம்

தொடர்புகளுக்கு : 076 883 5915
வீரக்கொடியார் வீதி, (பொலிஸ் நிலையம் முன்பாக) நுணாவில் சந்தி, சாவகச்சேரி


# கண்ணீர் அஞ்சலி

## திருமதி நவரத்தினசிங்கம் கிருசாம்பாள்



மலர்வு : 14.11.1942
உதிர்வு : 18.05.2021

எமது நண்பர்கள் **ந.நிமலன்** மற்றும் **ந.விமலன்** ஆகியோரின் அன்புத் தாயார் இறையடி சேர்ந்ததையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களை அன்னாரின் குடும்பத்திற்கு தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**A/L 1995 மத்தியின் மைந்தர்கள்**
**யாழ் மத்திய கல்லூரி**

# கண்ணீர் அஞ்சலி

அளவெட்டி வடக்கு மகளிர் சி.க.கூ. சங்கத்தின் முன்னாள் தலைவியாய் இருந்து யாழ் மாவட்ட சி.க.கூ.ச. சமாசத்தின் தெல்லிப்பழை பிராந்திய சபையின் செயற்பாட்டிற்கு தம்மாலான ஒத்துழைப்பினை நல்கிய

## திருமதி பத்மராணி இரத்தினசிங்கம்



அவர்களின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்புடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்

யாழ் மாவட்ட சி.க.கூ.ச சமாச
தெல்லிப்பழை பிராந்திய சபை

# மரண அறிவித்தல்

## மாணிக்கம் மகாலிங்கம் (இராசகிளி)



பிறப்பு : 27.07.1955
இறப்பு : 17.05.2021

ஸ்ரீலங்கா வீதி உடுவிலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் மகாலிங்கம் (இராசகிளி) 17.05.2021 அன்று காலமானார்.

அன்னார் யோகராணியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - றோசம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னையா - அரியம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும், மனோகரன் (ஜேர்மனி), ஜினிவா ஆகியோரின் பாசமிகு சகோதரனும், யோகராசா, வரதராசா, ஆனந்தராசா, டனி, புஷ்பராணி, சுகந்தராணி, வசந்தராணி (பிரான்ஸ்) செபமாலை, கிருபா ஆகியோரின் மைத்துனரும், டெவினா, சரன் (பிரான்ஸ்), பவன், சிவான், வினோத் ஆகியோரின் அன்புத் தந்தையும், துரேஸ்வரன், ஜெயந்தினி, சறோஜினி, தர்மினி ஆகியோரின் மாமனாரும், சஜேன், சஞ்சனா, டர்வின், சஷ்விகன், திருகர்ஷன், திருஅபி னாஷ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 19.05.2021 இன்று மு.ப. 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மாவட்ட பொது வைத்தியசாலை,முல்லைத்தீவு

## பெறுகைகளுக்கான அறிவித்தல்

## முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலைக்கான மருத்துவ உபகரணங்களுக்கான பெறுகை

01. தலைவர். பிராந்திய பெறுகைக் குழுவினால் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு பொருட்கள் வழங்குதலும் விநியோக சேவை மேற்கொள்வதற்குமான தகைமையுள்ள விலைமனுதாரர்களிட மிருந்து பொறியிடப்பட்ட விலை மனுப்பத்திரம் கோரப்படுகின்றது.

தேவையான விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| Reference No | Description | Qty | Bid Security | Reference No | Description | Qty | Bid Security |
|---|---|---|---|---|---|---|---|
| PSDG/MEP/2021/01 | Cardiac Monitor | 4 | 25,000.00 | PSDG/MEP/2021/02 | Lithotomy bed | 4 | 11,000.00 |
| | Defibrillator | 1 | | | Stretcher | 2 | |
| | Pulse Oximater & Neonatal probe | 1 | | | Ward round Trolley | 2 | |
| | Portable pulse ox meter | 2 | | | Patient Bed | 10 | |
| | ECG Recorder | 1 | | | Examination Lamp | 01 | |
| | Multipara Cardiac Monitor | 1 | | | IV Stand | 02 | |
| PSDG/MEP/2021/03 | Infusion Pump | 09 | 18,000.00 | | Reading Chart | 02 | |
| | Syringe Pump | 10 | | | Logmar Chart | 01 | |
| | Stethoscope Paediatric | 01 | | | 3 Mirror Lense | 01 | |
| | Stethoscope | 02 | | | Medicine Trolly | 02 | |
| | Slit Lamp | 01 | | | Dental Chair (Xtray) | 01 | |
| | | | | PSDG/MEP/2021/04 | Semi-Automated Coagula meter | 01 | 37,000.00 |
| | | | | | Electro Surgical Equipment | 01 | |
| | | | | | Hand Held Digital Dermatoscope | 01 | |

02. பெறுகை நடைமுறை தேசிய விலைக்கேள்வி போட்டி முறையில் அமையும்.

03. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை கணக்காளர். மாவட்ட பொது வைத்தியசாலை. முல்லைத்தீவு எனும் முகவரியில் (021-206-1423. தொலைநகல் -021-206-1423. மின்னஞ்சல்: - dghmullaitivu@gmail.com ) பெற்றுக் கொள்ளலாம் என்பதுடன் பெறுகை ஆவணங்களை இம் முகவரியிலே வேலை நாட்களில் 09.00 மணி தொடக்கம் 15.30 மணி வரை பரிசீலிக்க முடியும்.

04. ஆங்கில மொழியில் அமைந்த கேள்வி ஆவணங்களை. வேலை நாட்களில் கீழ்க் குறிப்பிட்ட முகவரியில் 12 வைகாசி 2021 ஆம் திகதி தொடக்கம் 02 ஆனி 2021 ஆம் திகதி வரை 09.00 மணி தொடக்கம் 15.30 மணி வரையான காலப்பகுதியில் எழுத்து மூலமான கோரிக்கையுடன் ரூபா 1,500.00 தொகையினை மீளளிக்கப்படாத வைப்பாகச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

05. பெறுகை ஆவணங்கள் கீழ்க் குறிப்பிடப்பட்ட முகவரியிலுள்ள கணக்காளரின் அறையில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில 03 ஆனி 2021ம் திகதி மு.ப 10.00 மணிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். விலைமனுக்கள் அனைத்தும் பெறுகை நேர முடிவில் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும் எனப்துடன் தாமதமான பெறுகைகள் நிராகரிக்கப்படும்.

06. இவ் விலைமனுக் கோரலை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அல்லது எந்தவொரு நிலையிலோ இப்பூரண நடவடிக்கையிலிருந்து எவருக்கும் நட்டஈடு எதுவும் செலுத்தாமலே இவ் விலைமனுக் கோரலை ரத்துச் செய்வதற்கு பெறுகைக்குழுத் தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு.

**வைத்திய கலாநிதி. எம் உமாசங்கர்**
**தலைவர், பிராந்திய பெறுகைகள் குழு,**
**மாவட்ட பொது வைத்தியசாலை, முல்லைத்தீவு**

## நாக பூஷணி திருமண சேவை

நீங்கள் விரும்பும் அரச, தனியார் துறை, உள்நாட்டு, வெளிநாட்டு, மணமக்கள் ஜாதகங்கள் மிகப் பொருத்தமாக உடன் பெற்றுக் கொள்ளலாம்.

**021 222 9306, 077 138 7596**
கந்தர்மடம், யாழ்ப்பாணம்

## கண்ணீர் அஞ்சலி



எமது பிரதேச செயலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் **திரு. யோ.ராஜ்குமார்** அவர்களின் அன்புத் தந்தையார்

### திரு. கனகசபை யோகநாதன்

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலரும், உத்தியோகத்தர்களும்
உத்தியோகத்தர் நலன் புரிச் சங்கம் - பிரதேச செயலகம் வேலணை

## Vacancy Announcement.

**Position : Program Manager**
**Location : Vavuniya**
**Contract : One Year Fixed Term Appointment with possible annual extensions**

We are an independent non-profit local organization, working in Sri Lanka since 2013 and committed to implement projects to improve the quality of life focussing vulnerable men and women, including children, and youths by focusing and responding to their essential needs, respecting the fundamental rights, promoting their active participation and inclusion in building sustainable development processes in the selected divisions in the conflict affected areas in the north and the north central divisions.

We expect to hire a Program Manager who is able to implement the program with team under the guidance of secretary general.

**Education:** University Degree in Social Sciences, Business Development /Administration, Accounting and Finance.

**How to Apply:**
CV should be emailed to recruitment.vavuniya@gmail.com on or before 31st May 2021.

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

## மரண அறிவித்தல்

தோற்றம் 18 - 06 - 1974



மறைவு 18 - 05 - 2021

### கந்தசாமி விக்னேஸ்வரன் (சிவா)

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், வண்ணார்பண்ணை சிவன் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி விக்னேஸ்வரன் அவர்கள் நேற்று (18.05.2021) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி ஆச்சாரி மற்றும் சத்தியபாமா அவர்களின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி ஆச்சாரி, கண்ணகை அவர்களின் அன்பு மருமகனும், அமுதினியின் அன்புக்கணவரும், விதுஷன், ஜதுஷன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், லோகேஸ்வரன், சுதர்சன் (நீயூ பிரணகாஸ் ஜுவலறி), துஷ்யந்தி, பிரணகா ஆகியோரின் அன்புச் சகோதரனும், குமரேசன், துரைச்சாமி (சேகர்) சிவராஜா, சண்முகராஜன், தனுஷியா, அபர்ணா, நுசிபன் ஆகியோரின் மைத்துனரும், புவனேஸ்வரி, இராமலட்சுமி, தயாளினி, ஆகியோரின் உடன் பிறவா சகோதரனும், கஜீவ், கஜிகாவின் அன்புப் பெரியப்பாவும், தனுஷாந், நாகஜன், வைத்தீஸ்வரன், சிவசங்கர், சிவதர்ஷன், கௌரிசன், அபிராமி, சங்கரி, கௌமிகா, கஜானன், பவிஸ்னா ஆகியோரின் அன்பு மாமாவும் ஆவார்.


அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (19.05.2021) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்றுபூதவுடல் தகனக்கிரியைக்காக யாழ் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**ஆஸ்பத்திரி றோட்,**
**யூனியன் வீதி கடைக்கு அருகாமை**

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**077 240 5563**

## 2ஆம் ஆண்டு நீங்காத நினைவலைகள்

மண்ணில் 12 . 07 . 1986



விண்ணில் 19 . 05 . 2019

### அமரர் முருகையா முகுந்தராஜ் (முகுந்தன்)

ஈராண்டு சென்றாலும்
நாளாக நாளாக
தீராது உன் பிரிவின் வலி
அழிந்து போனாயா
அன்பு சகோதரா
பாவிகள் ஆற்றிய கொடும்
பாவச் செயலினால்
பார் உலகம் சென்றாயோ
இல்லை
பாதி வழிதனில் நின்றாயோ
ஏன் இந்த அவலம்
என் நெஞ்சில் எரியும்
வேதனை தீ
நீடித்த காற்றில் எரியும்
தீபம் போல் தள்ளாடுகிறது.

மரணமே வாழ்வில் கொடியது
அந்த கொடியதின் கொடூரத்தை
அனுபவித்தாயே.
இந்த பூமித்தாய் மடிதனில்
மனசாட்சி இல்லாத அந்த மிருகங்கள்
சிறுபொழுதும் உயிர்வாழக்கூடாது
என மனம் ஏங்குகிறது
ஆனால் காலத்தின் நியதி என்னவோ..
அடேய் அண்ணா
மறு பிறப்பு உண்டெனில் - நீ
உருவாகுவாய் இந்த துஷ்ரர்களின்
காலனாய்
இதுவே சகோதரரான நாம்
இறையாசி வேண்டி உன் ஆத்மாவிற்கு
மலர்ச்சாந்தி செலுத்துகின்றோம்.

**இல. 30, பரியாரியார் வீதி,**
**கொக்குவில் கிழக்கு**

ஈர விழிகளுடன் உன் பாசமுள்ள
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனப்படுகொலை...

கொரோனாப் பெருந்தொற்றைத் தடுப்பதற்கான சட்டங்கள் நாடளாவிய ரீதியில் நடைமுறையில் உள்ள நிலையில், மக்களைத் திரட்டாமல் பல்வேறு இடங்களில் இந்த நினைவஞ்சலிகள் இடம்பெற்றன.

பலத்த இராணுவ, பொலிஸ் மற்றும் புலனாய்வாளர்களின் கண்காணிப்புக்களை மீறி முள்ளிவாய்க்கால் மண்ணில் வேலன் சுவாமிகள் அஞ்சலி செலுத்தினார். இறந்தவர்களின் நினைவாக மரக்கன்றையும் அவர் நட்டார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் இராணுவ மற்றும் புலனாய்வாளர்களின் கண்காணிப்புக்கள் இருந்த நிலையிலும், அங்குள்ள முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபிக்கு முன்னால் சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

யாழ்ப்பாணம் மறைமாவட்ட ஆயர் இல்லத்திலும் நேற்று மாலை 6 மணிக்கு ஆலய மணி ஒலிக்க விடப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது. இதில் அருட்தந்தையர்களும் சுகாதார விதிகளைப் பின்பற்றிக் கலந்துகொண்டனர்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன், நவாலி முருகமூர்த்தி ஆலயத்தில் அஞ்சலி செலுத்தினார். சென். பீற்றர்ஸ் தேவாலயத்தில் இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தச் சென்ற அவர், அங்கு அனுமதிக்கப்படாததை அடுத்து முருகமூர்த்தி ஆலயத்தில் அஞ்சலியைச் செலுத்தினார்.

வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் சிவாஜிலிங்கம் முல்லைத்தீவில் பாதுகாப்புக் கெடுபிடிகளைத் தாண்டி அஞ்சலி செலுத்தினார். அத்துடன் தனது அலுவலகத்திலும் இந்த அஞ்சலி நிகழ்வை அவர் மேற்கொண்டார். யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் தலைமையில், பிரதி முதல்வர் து.ஈசன் உள்ளிட்டவர்களின் பங்குபற்றலோடு அஞ்சலி நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன. கிளிநொச்சி யூனியன் குளப் பகுதியிலும் கொல்லப்பட்டவர்களுக்காக அஞ்சலி செலுத்தப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தனது இல்லத்தில் முள்ளிவாய்க்கால் பேரவலத்துக்கான அஞ்சலியைச் செலுத்தினார்.

நாடாளுமன்ற உறுப்பினர் க.வி.விக்னேஸ்வரன், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் அலுவலகத்தில் அஞ்சலி செலுத்தினார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றில் மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலி செலுத்தினர். தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டை அலுவலகங்களிலும் இந்த அஞ்சலி நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன.

மன்னாரில் நேற்று மாலை ஆலயங்களில் சோக மணிகள் ஒலிக்க விடப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது. (ம-26,319)

(மேலதிக செய்திகள் உள்ளே)

## இனப்படுகொலையே...

வில்லை. புலிகள் அமைப்புக்கு முடிவு கட்டி மக்களை மீட்டெடுப்பதற்காகவே போர் முன்னெடுக்கப்பட்டது. எனவே, போர் வெற்றி என்பது வடக்கு, கிழக்கு மக்களுக்கும் சொந்தமானதொன்றாகும்' என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

நாடாளுமன்றம் நேற்று முற்பகல் 10 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது.

இதன்போது விசேட உரை நிகழ்த்துகையிலேயே பிரதமர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்;

'முப்பது ஆண்டுகால பயங்கரவாதத்தை நாட்டிலிருந்து இல்லாதொழித்து இன்றுடன் பன்னிரெண்டு ஆண்டுகளாகின்றன.

2009 ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் திகதி இந்த நாட்டின் அனைத்து மக்களும் தேசிய கொடிகளுடன் வீதியில் இறங்கி தங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்தியிருந்தமை எனக்கு நன்கு நினைவிருக்கிறது. அந்த வெற்றி நாட்டின் ஒரு பகுதியினருக்கு மாத்திரம் கிடைத்த வெற்றி அல்ல. பயங்கரவாதிகள் மனித கேடயங்களாகப் பயன்படுத்திய நான்கு லட்சத்துக்கும் மேற்பட்ட பணயக் கைதிகளை நாங்கள் விடுவித்தோம். வடக்கு, கிழக்கில் உள்ள எமது மக்கள் அகதிகளாக இடம்பெயர்ந்து, ஆண்டுக்கு ஓரிரு தடவைகள் தாம் வாழ்ந்த வீடுகளை கைவிட்டு, மூட்டை முடிச்சுக்களுடன் உயிரை மாத்திரம் கையில் பிடித்துக்கொண்டு ஒவ்வொரு இடமாக அலைந்து திரிந்த யுகத்தை நாம் முடிவுக்கு கொண்டுவந்தோம்.

சுமார் 20 ஆண்டுகளாக அனாதை இல்லங்களில் வாழ்ந்த கிழக்கு மக்களுக்கு, தங்கள் வீடுகளுக்குச் சென்று கௌரவமாக வாழ வழியமைத்தோம்.

தங்கள் பிள்ளைகளை போரில் ஈடுபடுத்தாது ஒரு நாட்டைக் கட்டியெழுப்பி இருப்பதால் இந்த வெற்றி வடக்கு மற்றும் கிழக்கு மக்களுக்கும் சொந்தமானது. ஸ்ரீ மஹா போதி, தலதா மாளிகை, காத்தான்குடி பள்ளிவாசல் மற்றும் மடு தேவாலயம் அருகே குண்டுகள் வெடிக்காததால் இந்த வெற்றி அனைத்து மதங்களுக்கும் சொந்தமானது. தமது பிள்ளைகளுக்காக பாடசாலை வாயில்களில் காவல் காக்கும் சகாப்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்ததால் இந்த வெற்றி அனைத்து மக்களுக்கும் சொந்தமானது.

அதுமாத்திரமன்றி, இவ் வெற்றி இந்த உயரிய சபை பெற்ற பெரும் வெற்றியாகும். புலிகள் முதலில் மக்கள் பிரதிநிதிகளையே இலக்குவைத்தனர். துரையப்பா, அமிர்தலிங்கம், சாம் தம்பிமுத்து முதல் மக்கள் பிரதிநிதிகள் பலர் உயிரிழந்தனர். இந்த சபையை பிரதிநிதித்துவப்படுத்திய ஆர். பிரேமதாச, லஷ்மன் கதிர்காமர், காமினி திசாநாயக்க, லலித் அத்துலத்முதலி, ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே, த.மு.தசநாயக்க மற்றும் சீ.வி.குணரத்ன உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகள் பலரது உயிரை பயங்கரவாதிகள் பறித்துக்கொண்டனர்.

இந்த சபை உறுப்பினர்களுக்கு பின்னால், பயங்கரவாதியின் ஒரு துப்பாக்கியும் வெடிகுண்டும் இருந்தது. எனவே, இந்த வெற்றியை இந்த சபையில் உள்ள எவரும் குறைத்து மதிப்பிடக்கூடாது.

அன்று போருக்கு சென்ற எவரும் இனப் படுகொலை நிகழ்த்துவதற்காக அங்கு செல்லவில்லை.

அன்று பாதுகாப்பு செயலாளராக இருந்த கோத்தபாய ராஜபக்ச, முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா, முன்னாள் கடற்படை தளபதி வசந்த கரன்னாகொட, முன்னாள் விமானப்படை தளபதி ரொஷான் குணதிலக ஆகியோர் இனப் படுகொலை நிகழ்த்துவதற்காக தங்களது படைகளை வழிநடத்தியவர்கள் அல்லர் என்றார். (ம-44)

## முன்னாள்...

வந்த நிலையில் நேற்றுமுன்தினம் இரவு உயிரிழந்தார். கொரோனாத் தொற்றுடன் கந்தளாய் தள மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே அவர் உயிரிழந்தார். திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் கிழக்கு சேனையூரில் பிறந்த இவர் மூன்று தடவைகள் இலங்கை நாடாளுமன்றத்தில் உறுப்பினராக இருந்து மக்களுக்கு சேவையாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-ப)

## திங்கள்,

அறிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனாப் பெருந்தொற்றுக் காரணமாக நாடெங்கிலும் இறுக்கமான பயணத் தடைகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. எதிர்வரும் 21ஆம் திகதி முதல் 25ஆம் திகதி அதிகாலை 4 மணி வரையும், பின்னர் 25ஆம் திகதி இரவு 11ஆம் திகதி முதல் 28ஆம் திகதி அதிகாலை 4 மணி வரையும் பயணத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், எதிர்வரும் 24ஆம் மற்றும் 25ஆம் திகதிகள் அரச விடுமுறையாக அறிவிக்கப்பட்டுள்ளன.

எனினும், இது வங்கி மற்றும் வர்த்தக விடுமுறையில் இணைத்துக்கொள்ளப்படல்லை என்று பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார். (ம)

## உயர்நீதிமன்றத்தின்...

இதன்போதே மேற்படி சட்ட வரைவு தொடர்பில் உயர்நீதிமன்றம் முன்வைத்துள்ள அனைத்து பரிந்துரைகள் மற்றும் திருத்தங்கள் ஆகியவற்றை ஏற்று அதற்கமைய நிறைவேற்றுவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. இந்தச் சட்ட வரைவு மீது இன்றும், நாளையும் நாடாளுமன்றத்தில் விவாதம் இடம்பெறவுள்ளது. நாளையதினம் இடம்பெறும் குழுநிலை விவாதத்தின் போதே தேவையான திருத்தங்கள் முன்வைக்கப்படும். அதன்பின்னர் சட்ட வரைவு வாக்கெடுப்புக்கு விடப்படும். எதிரணி வாக்கெடுப்பைக் கோராத பட்சத்தில் திருத்தங்கள் சகிதம் சட்ட வரைவு நிறைவேறும். (ம-44)

## கொரோனாவால்...

வந்த குருநகரைச் சேர்ந்த 66 வயதுடைய பெண்ணே உயிரிழந்தவர் என்று வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். (ம-26)

## வடக்கில்....

டுத்தப்பட்டது என்று மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை, யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவ பீட ஆய்வுகூடங்களில் 937 பேரின் மாதிரிகள் இன்று (நேற்று) பரிசோதனைக்கு உள்படுத்தப்பட்டன. அவர்களில் 137 பேருக்கு தொற்றுள்ளமை கண்டறியப்பட்டது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 95 பேரும் கிளிநொச்சி மாவட்டத்தில் 31 பேரும் வவுனியா மாவட்டத்தில் 7 பேரும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 4 பேரும் என 137 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு மருத்துவமனையில் 2 பேரும் ஒட்டுசுட்டான் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 2 பேரும் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி கரைச்சி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 31 பேருக்கு தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. அவர்களில் ஒருவர் பொலிஸ் அலுவலர். சிலர் வீதி சீரமைப்பு பணியில் ஈடுபடுபவர்கள். ஏனையோர் சுயதனிமைப்படுத்தலில் இருந்தவர்கள். வவுனியா சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 4 பேருக்கும் மாவட்ட பொது மருத்துவமனையில் 2 பேருக்கும் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட 8 பேருக்கு கொரோனா உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவர்களில் குருநகரைச் சேர்ந்த 66 வயதுடைய பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பருத்தித்துறை மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட மூவருக்கும் கோப்பாய் மருத்துவமனையில் இருவருக்கும் தெல்லிப்பழை மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட மூவருக்கும் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

கரவெட்டி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 36 பேருக்கு தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. நெல்லியடி வெதுப்பகம் ஒன்றில் 33 பேரும் நெல்லியடி வர்த்தகர்கள் மூவரும் இதில் அடங்குகின்றனர்.

தெல்லிப்பழை அந்தோனிபுரம் கிராமத்தில் சுயதனிமைப்படுத்தலில் கண்காணிக்கப்பட்ட 17 பேருக்கு தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 15 பேருக்கும், சங்கானை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 6 பேருக்கும் சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் இருவருக்கும் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது - என்றார். (ம-26)

## முள்ளிவாய்க்கால்...

அங்கு நினைவுச்சின்னம் நிறுவப்படும். அதற்கான அனைத்து முயற்சிகளையும் அனைவரும் இணைந்து முன்னெடுக்க வேண்டும் என்று இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை. சேனாதிராசா தெரிவித்தார்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் யாழ்ப்பாண அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சர்வதேசத்தின் தலையீட்டாலேயே இனப் படுகொலைக்கான நீதியைப் பெற்றுக்கொள்ள முடியும். ஒவ்வொரு ஆண்டும் முள்ளிவாய்க்கால் நினைவு தின நாளில் இராணுவத்தினர் மற்றும் அரசால் அந்த நினைவுதினத்தை மக்கள் அஞ்சலிக்க விடாதவாறு தடைகள் ஏற்படுத்தப்படுகின்றன. அத்தோடு, கொல்லப்பட்ட மக்களின் நினைவாக, ஒரு இனப் படுகொலையின் சாட்சியாக முள்ளிவாய்க்கால் மண்ணில் நிறுவப்பட்டிருந்த நினைவுச் சின்னம், இரவோடு இரவாகத் தகர்த்து அழிக்கப்பட்டுள்ளது. எனவே அந்த மண்ணில், மீண்டும் ஒரு நினைவுச் சின்னத்தையோ, அல்லது நினைவு மண்டபத்தையோ அமைக்க முயற்சிகள் எடுக்கப்படும் - என்றார்.

இந்த நினைவேந்தல் நிகழ்வில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (ம-ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலை தூபியில்

# விளக்கேற்ற முற்பட்ட சிவாஜியை தடுத்து ராணுவத்தினர் அட்டகாசம்

யாழ்ப்பாணம், மே 19

தமிழாராய்ச்சி மாநாட்டில் படுகொலை செய்யப்பட்டவர்களின் நினைவாக யாழ்ப்பாணம் பண்ணைப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள, நினைவுத் தூபியில் விளக்கேற்றச் சென்ற மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் சிவாலிங்கத்தை இராணுவத்தினர் தடுத்துநிறுத்தி அட்டகாசம் புரிந் துள்ளனர்.

முள்ளிவாய்க்கால் நினைவு நாளை முன்னிட்டு படுகொலை நினைவுத் தூபியில் சுடரேற்ற முயன்றபோது அங்கு கடமையில் இருந்த இராணுவத்தினர் தடுத்து நிறுத்தினர்.

அதனையும் மீறி தூபி இருந்த வளாகத்தினுள் சென்று சிவாஜிலிங்கம் விளக்கேற்ற முயன்ற போது, சப்பாத்து கால்களுடன் இராணுவத்தினர் அதனுள் சென்று சுடரேற்ற விடாது சிட்டிகளை பறிக்க முயன்றும், அதனை தட்டி விடவும் முயன்றனர்.

அதனால் அந்த இடத்தில் இராணுவத்தினருக்கும் சிவாஜிலிங்கத்துக்கும் இடையில் நீண்ட வாய்த்தர்க்கம் ஏற்பட்டது. பின்னர் அந்த இடத்துக்கு வந்த பொலிஸார், சிவாஜிலிங்கத்தின் அடையாள அட்டையின் இறுதி இல்லக்கத்தின் பிரகாரம் இன்றைய



தினம் வெளியில் செல்ல முடியாது எனவும், அதனால் கொரோனா நோய் சுகாதார கட்டுப்பாடுகளை மீறிய குற்றசாட்டில் கைதுசெய்வோம் என்றும் மிரட்டி அனுப்பினர். எனினும், அவர் வல்வெட்டித் துறையில் உள்ள தனது அலவலகத்துக்கு முன்பாக விளக்கேற்றி முள்ளிவாய்க்கால் நினை வேந்தலைக் கடைப்பிடித்தார்.

இதன்போது அவருடைய அலுவலகத்துக்கு முன்பாக இராணுவத்தினரும் பொலிஸாரும் குவிந்திருந்தனர். (த-26)

## கரைச்சி பிரதேச சபைக்குள் கொரோனா கொத்தணி?

யாழ்ப்பாணம், மே 19

கரைச்சி பிரதேச சபைக்குள் கொரோனா கொத்தணி ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளன என்று சுட்டிக் காட்டப்படுகிறது.

கடந்த வியாழக்கிழமை குறித்த பிரதேச சபையில் பணியாற்றும் பணியாளர்கள் மற்றும் பிரதேச சபை ஊழியர்கள் என சிலரிடம் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொண்டதில் பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் உட்பட ஏழு பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதையடுத்தே கரைச்சிப் பிரதேச சபைக்குள் கொத்தணி உருவாக வாய்ப்புள்ளது எனக் கருதப்படுகிறது. (ம)

## கசிப்பு உற்பத்தி நிலையம் இளைஞர்களால் முற்றுகை

### வவுனியாவில் சம்பவம்

வவுனியா,மே 19

வவுனியாவின் எல்லைப்பகுதியான கல்மடு கண்டல்வேலி குளத்தடியில் கசிப்பு உற்பத்தி செய்யும் இடம் இளைஞர்களால் முற்றுகையிடப்பட்டுள்ளது.

குறித்த பிரதேசத்தில் நீண்டகாலமாக கசிப்பு உற்பத்தி இடம்பெற்றுவரும் நிலையில் பல்வேறு சமூகப் பிரச்சினைகள் ஏற்பட்டுவந்தன. அதனால் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற வாள்வெட்டு சம்பவத்தில் ஒருவர் படுகாயமடைந்திருந்தார்.

இதனையடுத்து அன்று இரவு குறித்த பகுதியில் ஒன்றுகூடிய கிராம மக்கள் மற்றும் இளைஞர்கள் கசிப்பு உற்பத்தி செய்யும் இடத்தை முற்றுகையிட்டதுடன், ஐந்துக்கும் மேற்பட்ட கசிப்பு பரல்களையும் மீட்டுள்ளனர். எனினும் கசிப்பை உற்பத்திசெய்த நபர்கள் தப்பிச்சென்றுள்ள நிலையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

சம்பவ இடத்துக்கு வந்த நாடாளுமன்ற உறுப்பினரான திலீபன் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதனின் செயலாளர் அ.அலெக்ஸ் (சுகேந்திரன்) மற்றும் மாகாணசபை முன்னாள் உறுப்பினர் செ.மயூரன் ஆகியோர் இளைஞர்களுடன் கலந்துரையாடினர். (ஐ-110)

## ஆயிரத்தை கடந்த கொரோனா சாவுகள்

*நேற்று மாத்திரம் 34 பேர் காவு*
*மேலும் 2,478 பேருக்குத் தொற்று*

கொழும்பு, மே 19

இலங்கையில் நேற்று 34 பேர் கொரோனாப் பெருந்தொற்றால் உயிரிழந்தனர். இதுவே இலங்கையில் நாளொன்றில் பதிவான ஆகக்கூடிய கொரோனாச் சாவு எண்ணிக்கையாகும். சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரச தகவல் திணைக்களம் இதனை நேற்றிரவு தெரிவித்துள்ளது. இதற்கமைய நாட்டில் பதிவான மொத்த கொரோனாச் சாவுகள் எண்ணிக்கை 1015ஆக அதிகரித்துள்ளது. இதே வேளை, நாட்டில் நேற்றும் 2 ஆயிரத்து 478 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை ஒரு இலட்சத்து 47 ஆயிரத்து 680ஆக அதிகரித்துள் ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றிலிருந்து ஒரு இலட்சத்து 21ஆயிரத்து 145 பேர் குணமடைந்துள்ளனர் எனவும், 25 ஆயிரத்து 520 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் அரச தகவல் திணைக்களம் மேலும் குறிப் பிட்டுள்ளது. (ம-22)

காணி விற்பனைக்கு உண்டு
யாழ்ப்பாணம் மாநகரசபைக்கு உட்பட்ட ஓட்டுமடம் சந்தி மானிப்பாய் வீதியில் 1 ஆம் ஒழுங்கையில் 10 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
2 பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும்.
யாழ் நகரிலிருந்து 1½ km தூரம்
(பரப்பின் விலை 6 லட்சம் ரூபா)
தொடர்பு:077 288 0152, 077 235 2656
074 075 4204

காணி தேவை
வடமாகாணத்தில் கடற்கரையோரத்தில் 40 ஏக்கருக்கு மேற்பட்ட காணி தேவை.
076 582 1456, 076 207 8289

காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் ஆறுகால் மடத்தில் 1ம் ஒழுங்கையில் 42 பரப்புக் காணி விற்பனைக்கு. 2 பரப்பாக பிரித்து கொடுக்கப் படும். 1 பரப்பின் விலை 6 இலட்சம் மட்டும்.
(யாழ் மானிப்பாய் பிரதான வீதியில் இருந்து 100m தூரம்)
தொடர்பு:
076 221 2037
077 2036 402

V A V Holdings (Pvt) Ltd.
வேலைவாய்ப்பு
கனடா நாட்டிற்கான உடனடி வேலைவாய்ப்பு
கனடா மொன்றியல் நகரில்
• மீன்பொதிசெய்பவர்கள் - 40 20 CAD/h
• மேற்பார்வையாளர் - 30 25 CAD/h
உடன்படிக்கை கைசாத்திட்டு 90 நாள்களில் பயணம்.
தொடர்பு: பிரபு
071 368 4639, 077 845 5173
Branch :
No. 14, Muslim College Road, Jaffna, Sri Lanka
Tel : 021-3153131 / 021-3153132 / 021-3153133
E-mail : vavholdingsjaffna@gmail.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 19.05.2021இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.